ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டுச் சந்தா ரூ. 5] [தனி இதழ் 50 ந. பை.

மலர் 33	அக்டோபர் 1969	இதழ் 10

தனக்குவமை இல்லாத தனிப்பெருந் தலைவர்

அன்பின் திருவுரு—அறநெறியின் வடிவம்—இந்தியத் தந்தை—உலக உத்தமர் காந்தியடிகளின் நூறாவதாண்டுப் பிறந்த நாள் விழா, அக்டோபர் இரண்டாம் நாள் முதல் இந்தியத் திருநாடு முழுவதும் ஆழிலோடும் ஏற்றத்தோடும் கொண்டாடப்பட்டுவருகிறது.

பொதுக்கூட்டங்கள் கூட்டி, காந்தியடிகளின் பல்வேறு சிறப்புகளை எடுத்து விளக்கிச் சொற்பொழிவுகள் ஆற்றி மகிழ்ச்சி கொள்கின்றனர் ஒரு சாரார்.

ஊர்வலங்கள் அமைத்து, காந்தியடிகளின் வாழ்க்கைவரலாற்றைச் சித்திரிக்கும் பலவகைக் காட்சிகள் கொண்ட அலங்கார வண்டிகளைப் பவனி வரச் செய்து உள்ளம் களிக்கின்றனர் வேறொரு சாரார்.

கருத்தரங்குகளும் கவியரங்குகளும் நடத்தி, அறிஞர் பெருமக்கள் பலரைக் கொண்டு, அறப்போர் அண்ணல் காந்தியடிகளின் பலதிறப் பணிகள் பற்றிய கருத்துரைகளையும் கவிதைகளையும் பொது மக்கள் முன்னிலையில் அரங்கேற்றி மகிழ்கின்றனர் மற்றொரு சாரார்.

காந்தியடிகளின் சிலைகள் எடுப்பித்தல், படத் திறப்பு விழாக்கள் நடத்துதல், கண்காட்சிகள் நிறுவுதல், நூல் நூற்பு வேள்விகள் நடத்துதல் முதலிய பணிகள் வாயிலாகக் காந்தியடிகளின் புனித நினைவுக்கு அன்பு அஞ்சலி செலுத்தி உவகை பூத்து நிற்கின்றனர் இன்னொரு சாரார்.

காந்தியடிகள் பற்றிய பல்வேறு தலைப்புகள் கொண்ட சொற்பொழிவுப் போட்டிகளையும், கட்டுரைப் போட்டிகளையும், ஓவியப் போட்டிகளையும் ஒப்பித்தல் போட்டிகளையும் நாடகப் போட்டிகளையும் நடத்தி, அவற்றில் முன்னணி இடங்களைப் பெறுபவர்களுக்கு ஏராளமான பரிசுகளை வழங்கி, அவர்களையும் மகிழ்வித்துத் தாமும் மகிழ்ந்து, நாட்டையும் மகிழ்விக்கின்றனர் பின்னொரு சாரார்.

இந்தியாவில் உள்ள பல்வேறு அரசாங்கங்களும் அரசியல் கட்சிகளும் கல்வி நிலையங்களும் இலக்கியக் கழகங்களும் உள்ளாட்சி மன்றங்களும் வாணிப நிறுவனங்களும், ஒன்றிற்கு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு, ஒன்றை ஒன்று வெல்லும் வகையில் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்று இருக்கின்றன.

சாதி வேற்றுமை—சமய வேற்றுமை—கட்சி வேற்றுமை—கருத்து வேற்றுமை—மொழி வேற்றுமை—மாநில வேற்றுமை இன்ன பிற வேற்றுமைகள் அனைத்தையும் மறந்தவர்களாக, அனைத்தையும் கடந்தவர்களாக, இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கு நின்று உத்தமப் பெருந்தகையாளர் காந்தியடிகளுக்குத் தங்களன்பை, வணக்கத்தை, பாசத்தை, அஞ்சலியைக் காணிக்கையாகத் தந்து வருகின்றனர்.

இந்தியாவின் வடகோடியிலிருந்து தென் கோடி வரையில், கீழ்க் கோடியிலிருந்து மேற் கோடி வரையில், நாடு முழுவதும் ஒன்று திரண்டு ஓர் அணியில் நின்று, ஒத்த குரலுடனும் ஒரே உள்ளத்துடனும் காந்தியடிகளின் நினைவுக்குப் புகழ் மாலைகள் சூட்டி வணங்கிவருகிறது என்பது மட்டுமல்ல நம்மால் கவனிக்கப்படவேண்டிய உண்மை. ஈழநாட்

டில், மலேசியாவில், பர்மாவில், தாய்லாந்தில், இங்கிலாந்தில், அமெரிக்காவில், ஆப்ரிக்காவில், ஆஸ்ட்ரேலியாவில், எங்கும் எங்கெங்கும் காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டிருக்கிறது.

இந் நூற்றாண்டு விழாவின்போது, இந்தியா முழுவதிலும்—அது போலவே உலகம் முழுவதிலும் உத்தமர் காந்தியடிகளுக்குச் செலுத்தப் பட்டுள்ள இதயம் நிறைந்த அஞ்சலியின் அளவை எண்ணிப் பார்க்கும் எவருக்கும், காந்தியடிகளின் பெருமை எத்துணை விழுமியது என்பது தெற்றெனப் புலனாகும்.

இந்தியத் திருநாடு இன்றைய தினம் விடுதலைபெற்ற பெருநாடாக, உலக நாடுகளுக்கு இடையே தலையை உயர்த்தி நெஞ்சை நிமிர்த்தி அமர்ந்திருக்க முடிகிறதென்றால், இந்தச் சிறப்பை நமக்குப் பெற்றளித்த பெருமையில் பெரும் பங்கு காந்தியடிகளையே சாரும். இந்திய விடுதலையின் இணையற்ற சிற்பி காந்தியடிகள்தான். இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை உலகம் முழுவதும் அறியும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியில் சிக்குண்டு தவித்த இந்திய மக்களை அஞ்சாத நெஞ்சு படைத்த அடலேறுகளாக மாற்றி அமைத்து, விடுதலைப் போர்க் களங்கள் பலவற்றில் தளராத உறுதியுடனும் தயங்காத ஆர்வத்துடனும் அவர்களை ஈடுபடவைத்த பேராற்றல் படைத்தவர் காந்தியடிகள். கோழைகளையும் வீரர்களாக மாற்றிய அற்புதமான அரசியல் தலைவர் அவர். கூனர்களையும் நிமிர வைத்த மாபெரும் சாதனைக்குரிய மகத்தான வீரர் அவர். அவர் பிறந்தபோது, இந்தியா, 'அடிமை நாடு' ஆனால் அவர் மறைந்த போதோ இந்தியா சுதந்திர பூமி. இந்த மாபெரும் மாற்றத்தை உருவாக்கிய மாமனிதர் அவர். ஆகவேதான் இந்தியா முழுவதும் அவருடைய நினைவுக்குத் தலை தாழ்த்திக் கரம் குவித்து இதயத்தால் அஞ்சலி செலுத்தி நிற்கிறது.

உலக வரலாற்றில் பல்வேறு நாடுகளுக்குப் பல்வேறு காலங்களில் விடுதலையைப் பெற்றளித்த தலைவர்கள் பற்பலர் உண்டு. ஆனால் அவர்களுக்கும் காந்தியடிகளுக்கும் இடையே மாபெரும் வேறுபாடு ஒன்று இருக்கிறது. அவர்கள் அனைவரும், அம்பு எய்தல்—வாள் வீசுதல்—குண்டு எறிதல்—பீரங்கியால் தகர்த்தல்—சுட்டு வீழ்த்தல்—வெட்டி எறிதல் முதலிய வன்முறைகளைக் கையாண்டு அவ்வழிகள் மூலமாகவே விடுதலையைப் பெற்றவர்கள். ஆனால் காந்தியடிகள் தொடுத்த

விடுதலைப் போரோ முற்ற முடிய அன்பு கொண்ட போர்; அறநெறியிலிருந்து அணுவளவும் வழுவாத போர்; அஹிம்சை சத்தியம், பகைவரிடமும் அன்பு காட்டும் உயர் பண்பு ஆகிய நெறிகளிலிருந்து பிறந்து வளர்ந்த புனிதப் போர்; மறநெறியை மறந்தும் நாடாமல், அறநெறி ஒன்றின் வாயிலாகவே விடுதலைப் போராட்டத்தை நடத்தி அதில் இணையில்லாத வெற்றியையும் பெற முடியும் என்னும் மாபெரும்உண்மையை உலக வரலாற்றில் முதன் முதலில் பொறித்த பெருமை, காந்தியடிகளின் தனி உரிமை, அண்ணல் காந்தி வகுத்துக் காட்டிய இந்தப் புதிய பாதையில், அப்பெருந்தகையாளரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்து, அன்னாருக்குப் பின் அதே முறையில் வெற்றிகள் பலவற்றை ஈட்டிய தலைவர்கள்—மார்டின் லூதர் கிங் போன்றோர் பலர் உளர். ஆனால் காந்தியடிகள்தான் இத்துறையில் முதன் முதலில் வழிகாட்டிய வித்தகர். உலகம் முழுவதும் இன்றைய தினம் உள்ளம் உவந்து காந்தியடிகளுக்கு அன்பு அஞ்சலி செலுத்துவதற்குரிய தலையாய காரணம் இதுதான்.

"அரசியல் என்பது ஒரு சாக்கடை. கயவர்களும் சழக்கர்களும் பொய்யர்களும் நாணயம் அற்றவர்களும் மட்டுமே அதில் நெளிய முடியும். தூய்மையும் வாய்மையும் படைத்த கண்ணியவான்களுக்கு அதில் துளியும் இடம் இல்லை"—நடைமுறை அரசியல் பற்றி நீண்ட நெடுங்காலமாகப் பெரும்பாலான பொது மக்களிடம் வேருன்றி உள்ள கருத்து இது. இக் கருத்தைப் பொய்யாக்கி, மிக உயர்ந்த பண்பாளர்களும் அரசியலில் மிகச்சிறந்த இடத்தைப் பெற முடியும் என்பதைத் தம் வாழ்க்கையின் மூலம் மெய்ப்பித்துக் காட்டிய ஆற்றல், காந்தியடிகளின் மற்றொரு தனிச் சிறப்பு. அரசியலில் அறநெறிக்கு இடமில்லை என்னும் கூற்றைத் தகர்த்தெறிந்து, அரசியலையும் அறநெறியையும் ஒன்றாக இணைத்து, அறநெறியின் வாயிலாகவே அரசியலை நடத்திக் காட்டியவர் காந்தியடிகள். உலக வரலாறு காணாத மற்றொரு புதுமை இது. ஆனால் போற்றிப் பாராட்டத்தக்க புதுமை; பின்பற்றி நடப்பதற்கு உரிய புதுமை.

இறுதி நோக்கம் அல்லது குறிக்கோள் அப்பழுக்கு அற்றதாக இருந்து விட்டால் போதும்—அதை அடைவதற்கான முறைகள் அல்லது வழிகள் தவறானவையாக இருந்தாலும் கவலையில்லை. என்பது தான் உலகத் தலைவர்கள் பெரும்பாலோரின் கருத்தாக இருந்து

வருகிறது. நோக்கத்தின் உயர்வில் வழிமுறைகளில் தவறுகள் வந்து விழுந்து போகின்றன. என்பது அவர்களின் போலி வாதம். இந்தத் தவருன வாதத்தைக் காந்தியடிகள் ஒருநாளும் ஏற்றுக் கொண்டதில்லை. நோக்கம் உயரியதாக இருந்தால் மட்டும் போதாது—அதை அடைவதற்கான விதிகளும் முற்றிலும் பழுதற்றதாக இருந்தாக வேண்டும் என்பது காந்தியடிகளின் உறுதியான கருத்து. இந்தக் கருத்தை, அப் பெருந் தகையாளர், அவர் பொது வாழ்வில் ஈடுபட்ட தலை நாளிலிருந்து, வெறியன் ஒருவனின் குண்டுகளால் தம் ஆயிருரை இழந்த இறுதிநாள்வரை ஓயாமல் வற்புறுத்தி வந்தார்.

பொதுவாழ்வில் ஈடுபடும் தலைவர்கள் எத்தகைய பண்பாளர்களாக ஒளி வீசித் திகழவேண்டும் என்பதற்குக் காந்தியடிகள் தலைசிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். தனக்கென வாழாத பிறர்க் குரியாளராகவே அவர் என்றென்றும் வாழ்ந்து வந்தார். தன்னலம் அவர் அறியாத ஒன்று. ஆணவம், அவரை நெருங்க மறுத்த ஒரு குணம். அன்புடைமை, அருளுடைமை, வாய்மை, தூய்மை, அடக்கம் நேர்மை, பிறர் கேடு சூழாமை, பிறரைத் தாழ்த்தாமை, பகைவர்க்கும் அன்பு செய்யும் இயல்புடைமை முதலிய உயர்ந்த பண்புகள் அத்தனையும் ஒன்றுதிரண்டு ஓர் உரு எடுத்தாற்போல் அமைந்தவர் காந்தியடிகள். ஊருக்கு ஊர் உபதேசம்—தனக்கு ஒரு வழி என்கிற இரட்டை மனப்பான்மை. அந்த அரும் பெரும் தலைவரிடம் தப்பித் தவறியும் தலைகாட்டியதில்லை. தன்ஞல் பின்பற்ற முடியாத வழிகளை அவர் பிறருக்கு உபதேசம் செய்தது கிடையாது. அதே போலவே அவர் பிறருக்கு உபதேசம் செய்த வழிகள் எவற்றையும் தான் பின்பற்ருமல் இருந்ததும் கிடையாது. சொல்லும் செயலும் ஒருங்கு இணைந்து நின்ற சிறப்பு, காந்தியடிகளின் பல்வேறு சிறப்புகளுக்கெல்லாம் சிகரம் போல் அமைந்த ஒன்ருகும்.

ஒரு ஜதை செருப்பு, ஒரு பாக்கெட் கடிகாரம்; ஒரு மூக்குக் கண்ணுடி, ஒரு செயற்கைப் பல்வரிசை, தீய சொற்களைப் பேசாதே; தீய சொற்களைக் கேளாதே; தீய காட்சிகளைக் காணுதே என்னும் அறிவுரைகளை நினைவூட்டும்குரங்குப்பொம்மைகள் மூன்று—இவைதாம்,காந்தியடிகள் இறந்தபோது அவருடைய சொத்துக்கள் என்றுஎஞ்சி நின்றவை. வீடு வாசல் என்ருே, நிலபுலம் என்ருே, தோட்டம் துறவு என்ருே,

பாண்டு பத்திரம் என்றோ, பாங்கிகளில் இருப்பு என்றோ வேறு எத்தகையசொத்தும் அவரால் சேர்க்கப்படவும் இல்லை; விட்டுச் செல்லப்படவும் இல்லை. எவ்வளவு செல்வாக்குடன் வாழ்ந்த பெருந்தலைவர் அவர்! அவர் எண்ணியிருந்தால் எத்துணைப் பெருஞ் செல்வத்தை ஈட்டியிருக்க முடியும்! ஆனால் சிறிதளவேனும் செல்வத்தை ஈட்டினரா என்றால், இல்லை. பொன்னும் பொருளும் குவித்தல், சொத்தும் செல்வமும், சேர்த்தல், போக பாக்கியங்களில் புரளல் என்னும் அந்தப் பாதையை அவர் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. மக்களின் தொண்டு ஒன்றிலேயே, தன் வாழ்நாள் முழுவதையும், தன் ஆற்றல் அத்துணையையும், தன் நினைவுகள் ஒவ்வொன்றையும் அவர் செலவழித்தார். எளிய வாழ்வு எளிய வாழ்வு என்று பேசுகிறார்களே, அத்தகைய வாழ்வை உண்மையாகவே வாழ்ந்து காட்டிய உயர் பெருந்தலைவர் காந்தியடிகள்.

மனித குல வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே தோன்றக்கூடிய மிகச் சிறந்த—மிக விழுமிய—மிக உயர்ந்த மாமனிதர்களில் ஒருவர் காந்தியடிகள், கருணைக் கடல் புத்தர், அன்பின் திருவுரு ஏசுநாதர், சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ், அறிவுக் கடல் திருவள்ளுவர் ஆகிய உலகப் பெரு மக்களின் வரிசையில், அவர்களோடு ஒப்ப வைத்து எண்ணத்தக்க தனிப் பெருஞ் சிறப்புடைய தகைமையாளர் காந்தியடிகள். மாந்தருக்குள் ஒரு தெய்வமாக வாழ்ந்து காட்டிய விழுமிய வரலாற்றினர், அந்த உத்தமப் பெருமகனார். ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்று தெள்ளுதமிழால் தெரிவித்தாரே வள்ளுவப் பெருந்தகையார், அந்த அருமையான இலக்கணத்திற்குக் கிடைத்த அற்புதமான இலக்கியம், காந்தியடிகளின் திருவாழ்வு.

ஈடு இணையற்ற இத்தகைய பெருந்தலைவரைப் பெற்றெடுத்த பெருமைக்குரிய திருநாடாகிய இந்தியா, இப் பெருந்தகையாரின் நூற்றாண்டு விழாவை ஒப்பற்ற சிறப்புடன் கொண்டாடி வருவதில் வியப்பென்ன இருக்க முடியும்? கதிரவன் வருகை கண்டால் கமலம் மலர்ந்து மணம் வீசத்தானே செய்யும்? திங்கள் தோன்றி விட்டது என்றால் அல்லி துள்ளிக் குதித்து மகிழ்வது இயற்கைதானே? மழை முகம் கண்ட பயிர்முகம் இன்பத்தில் உறைவிடமாக மாறுவது எதிர்

பார்க்கக் கூடியதுதானே? இவையெல்லாம் இயற்கை. இவற்றைப் போலத்தான் உத்தமப் பெருந்தலைவர் காந்தியடிகளின் நூற்றாண்டுவிழா என்றதும் இந்திய மக்கள் அனைவரும் அளவற்ற ஆர்வத்துடனும் எல்லையற்ற மகிழ்ச்சியுடனும் விழாக் கோலம் பூண்டு நிற்பதும் இயற்கை.

காந்தியடிகளின் நூற்றாண்டு விழா இந்திய நாடு முழுவதிலும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. உண்மைதான், மறுப்பாரில்லை. ஆனால் விழா மிகச் சிறப்பாக நடைபெற்று விட்டால் மட்டும் போதுமா? சிலைகள் திறந்து, ஊர்வலங்கள் நடத்தி, பொதுக் கூட்டங்கள், அமைத்து, புகழ்மாலைகளையும் பாராட்டுரைகளையும் குவித்துவிட்டால் மட்டும் போதுமா? கருத்தரங்குகளையும் கவியரங்குகளையும் கட்டுரைப் போட்டிகளையும் சொற்பொழிவுப் போட்டிகளையும் பலவகையினவாக நடத்திப் பரிசுகள் பலவற்றை அள்ளிக் கொடுத்து விட்டால் மட்டும் போதுமா? காந்தியடிகள் வாழ்ந்து காட்டிய உயர்ந்த வாழ்க்கையை நாம் எந்த அளவுக்குப் பின்பற்றி நடக்கிறோம்? தனிவாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் அவர் பின்பற்றிக் காட்டிய தூய்மை, வாய்மை, எளிமை, பிறர்க்கு இன்னா செய்யாமை, அடக்கம் முதலிய சிறந்த பண்புகளை நாம் எந்த அளவு கைக்கொண்டு ஒழுகுகிறோம்? இதனை எண்ணிப் பார்க்கும் போதுதான், வேதனை, நம் இதயத்தைக் கப்பிக் கொள்கிறது. காந்தியடிகளைப் பாராட்டிப் பேசுவதிலேயும் அவருக்குத் திருப்பல்லாண்டு பாடுவதிலேயும் இந்திய மக்களும் தலைவர்களும் காட்டுகிற ஆர்வத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட அன்னாரின் விழுமிய பண்புகளைப் பின்பற்றி நடப்பதில் காட்டப்படவில்லை. துயரம் மிகுந்த உண்மை இது—ஆனால் மறுக்க முடியாத உண்மை.

சமயத் துறை, சமூகத்துறை, பொருளியல் துறை, அரசியல் துறை ஆகிய எந்தத் துறையை அலசி ஆராய்ந்து பார்த்தாலும், இந்தியப்பெரு நாட்டில் இன்றைய தினம்; நாணயக் குறைவு, ஒழுக்கச் சிதைவு, ஊழல், ஊதாரித்தனம், வரம்புகடந்த தன்னலம், கடமையைப் பற்றிக் கவலை துளியுமின்றி உரிமைகளை மட்டுமே வற்புறுத்துகிற இயல்பு முதலிய சீர்கேடுகள் மலிந்துகிடப்பதைக் காண்கின்றோம். காந்தியடிகளுக்கு இந்திய மக்கள் அனைவரும் அஞ்சலி செலுத்துவது இதய பூர்வமானதாகி இருக்குமானால், இந்தச் சீர்கேடுகளை அகற்ற

வதற்கு அவர்கள் சிறிதளவாவது முயற்சி செய்ய வேண்டாமா? காந்தியடிகளின் நூற்றுண்டு விழா சிறப்புடன் நடைபெறும் இச் சமயத்தில் நல்லறிவாளர்களின் இதயங்கள் கேட்கும் கேள்வி இது.

இந்திய மக்கள் எந்த அளவுக்குத் தங்கள் வாழ்க்கையில் காந்தியடிகள் வாழ்ந்து காட்டிய வாய்மையையும் தூய்மையையும் நேர்மையையும், ஒழுக்கத்தையும் பின்பற்ற முயல்கிறார்களோ அந்த அளவுக்ுத்தான் அவர்கள் உண்மையில் காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்தியவர்களாக ஆவார்கள். இத் துறையில் பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் அவர்களுடைய கடமையைச் சுட்டிக் காட்டி நேரிய பாதையில் அவர்களை நடக்கச் செய்வதில் ஆசிரியப் பெருமக்களுக்குச் சிறப்பான பங்கு உண்டு. பிறர் அனைவரையும் ஒழுங்கான பாதையில் நடக்கத்தூண்டவேண்டுமானால், முதலில் ஆசிரியப் பெருமக்கள் தங்கள் வாழ்க்கையில் தூய்மையும் வாய்மையும் கடமை யுணர்வும் நிறைந்தவர்களாக வேண்டும். காந்தியடிகள் வாழ்ந்து காட்டிய உயர்ந்த பாதையில் தாங்களும் நடந்து, பிறரையும் நடக்குமாறு தூண்டுவதைவிட மிகச்சிறந்த தொண்டு ஆசிரிய நன்மக்களுக்கு வேறென்ன இருக்க முடியும்? காந்தியடிகளின் நூற்றுண்டு விழா நடைபெறும் இச்சமயத்தில் ஆசிரியர் பெரு மக்கள் அத்தகைய விழுமிய தொண்டுக்குத் தங்களைத் தாங்களே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். என்பதே நம் ஆசை.

உதவிபெறும் ஆரம்பக்கல்வி உயர்தரக்கல்வி பாடசாலைகளின் சீர்திருத்தக்குழு.

G. O. No. 848 **18-6-1969**

✻

இக்குழுவின் அறிக்கையை ஆகஸ்டு மாதத்திய ஆரம்பக்கல்வியில் பிரசுரித்துள்ளோம். அந்த அறிக்கையில் வெளியிட்டுள்ள கேள்விகளுக்கு, பதில் எழுதி அனுப்பும்படி ஜில்லா சங்கங்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதற்கிணங்க சில ஜில்லாக்களிலிருந்து தங்கள் அபிப்பிராயங்களை அனுப்பியிருக்கின்றனர்.

மேற்கண்ட அறிக்கையை நூற்றுக் கணக்கில் அச்சடித்து ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி, அந்தந்த ஜில்லாவிலுள்ள எய்டட் பாடசாலை நிர்வாகிகளுக்கும், ஆசிரிய சங்கங்களுக்கும் அனுப்பும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. இன்னும் தனிப்பட்ட நிர்வாகிகளோ அல்லது நிர்வாக சங்கங்களோ தங்கள் அபிப்பிராயத்தை அனுப்பாமலிருந்தால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்த அறிக்கையில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு மாகாண சங்கத்தின் சார்பாக அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டிய பதில்களும் விளக்கங்களும் அடுத்த ஆரம்பக்கல்வி பத்திரிகையில் விளக்கமாகப் பிரசுரிக்கப்படும்.

இப்படிக்கு,

P. வீரராகவன்,

தலைவர்,

தமிழ்நாடு எய்டட் ஆரம்பப்பள்ளி, நடுநிலைப் பள்ளி,

நிர்வாகிகள் சங்கம்,

ஆரம்பக்கல்வி நிலையம்,

94/95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

கல்வித்துறைச் செய்திகள்

ஆசிரியர் ஓய்வு வயது

அரசு புது உத்தரவு

பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒருவர் பள்ளி ஆண்டின் மத்தியில் ஓய்வு வயதை அடைந்தால் மீண்டும் வேலைபார்க்கும் நிபந்தனையின் பேரில் நீடிக்க அனுமதிக்கப்பட வேண்டும். கோடைவிடுமுறைக்குப் பள்ளி மூடப்படும் வரை ஆசிரியர் பதவியில் நீடிக்கப்பட வேண்டும். உடல்நலத் தகுதி போன்ற வழக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு நீடிக்கப்படவேண்டும். சர்க்கார் ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் இது பொருந்தும். என்று தமிழக சர்க்கார் உத்திரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கிறது.

அரசு உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கு மானியம் உயர்வு

இப்போது தமிழ்நாட்டில் உள்ள மானிய உதவி பெறும் ஆரம்பப்பள்ளிக் கூடங்களுக்கு தரப்படும் மானிய உதவித் தொகையை உயர்த்துவது என்று தமிழ் நாடு அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. இப்போது ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகத் தரப்படும் பராமரிப்பு மானிய உதவித் தொகை 10 சதவிகிதத்திலிருந்து 12 சத விகிதத்துக்கு உயர்த்தப்படும்.

இப்போது மொத்தம் 31000 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதில் 7000 தனியார் நிர்வாகத்தில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிக் கூடங்களாகும். மற்றப் பள்ளிக்கூடங்கள் சர்க்காராலும் பஞ்சாயத்து யூனியன் அல்லது நகரசபைகளாலும் நடத்தப்படுகின்றன.

ஆசிரியர்களுக்குத் தங்கும் விடுதிகள் கட்டுவதுபற்றி ஆலோசனை

முக்கியமான ஊர்களில் ஆசிரியர்கள் க்ஷேம நல நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கு ஓய்வு விடுதிகள் கட்டும் ஒரு யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது என்று பள்ளிக் கல்வி டைரக்டர் திரு எஸ். வி. சிட்டிபாபு கூறினர்.

கோவையிலுள்ள பல்வேறு ஆசிரியர் சங்கங்களிலிருந்து ஆசிரி

யர்கள் க்ஷேமநல நிதிக்கு இன்று காலை அவரிடம் சுமார் ரூ. 19,000 அளிக்கப்பட்டது. தமிழ் நாட்டில் ஆசிரியர்கள் க்ஷேம நல நிதிக்காக இதுவரை கிட்டத்தட்ட ரூ. 16·5 லட்சம் வசூலாகி யிருக்கிறது. இத் தொகை பாங்கில் போடப்பட்டிருக்கிறது. அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து சிரம திசையிலுள்ள பல ஆசிரியர்கள் அல்லது ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்படுகின்றது. கஷ்டப்படும் ஆசிரியர்கள் அல்லது அவர்களைச் சார்ந்திருப்போருக்கு இதுவரை ரூ. 2 லட்சத்துக்கு மேல் வினியோகிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான நகரங்களுக்கு வரும் ஆசிரியர்களுக்குக் குறைந்த தொகையில் தங்கும் வசதி அளிப்பதற்காக ஆசிரியர் விடுதிகள் கட்டலாம் என்று மத்திய கல்வி மந்திரி யோசனை கூறியுள்ளார். இதுவும் பரிசீலிக்கப்படுகிறதுஎன்று திரு. சிட்டிபாபு கூறினர்.

கல்வி கூட்டு டைரக்டர் திரு. கே. வெங்கடசுப்ரமணியம் ராஜ்யத்திலுள்ள 10,000 ஆரம்பப் பள்ளிகளில் சிறிய நூலகங்கள் ஆரம்பிக்கும் ஒரு திட்டத்துக்கு சர்க்கார் அனுமதியளித்துள்ளது என்று சொன்னர்.

—“ தினமணி ”

“ ஆரம்பக் கல்வி ”
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-00

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-50

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of income

தபால் செலவு பிரத்தியேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்பத் தபால் செலவு:

25 பாரங்களுக்கு 15 nP.
50 பாரங்களுக்கு 30 nP.
75 பாரங்களுக்கு 50 nP.
100 பாரங்களுக்கு 70 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ரூபாய்க்கு 3 ந. பை.
விற்பனை வரியுண்டு.

மகாத்மாவின் மணிமொழிகள்

[துரை. முருகேசன்]

ஆசிரியர்,

பசுபதியப்பா பள்ளி, காரமடை.

❊

(1) வேலையோ உணவோ இல்லாமல் திடகாத்திரமாக ஒருவர் இருந்தாலும் நாம் ஓய்வு எடுத்துக் கொள்வதற்கோ, வயிறு நிறைய உணவு அருந்துவதற்கோ முயலுவதை அவமானமாகவே கருதவேண்டும்.

(2) எந்த ஒரு மனிதனுக்கும், ஏன் கடவுளுக்கும்கூட, மற்றொருவரைத் தன்னைவிடத் தாழ்ந்தவராகக் கருத முடியாது. ஒவ்வொருவரையும் உடன் பிறந்த சகோதரராகவே கருத வேண்டும். இதுதான் எல்லாச் சமயங்களும் கூறும் அடிப்படை நெறி.

(3) ஒழுக்கமின்றி கற்பனை செய்து கொள்ளும் கடவுள் உயிரற்ற கடவுளேயாகும். அத்தகைய கடவுளுக்கு நமது வீண் கற்பனையில் தான் நாம் உயிர் கொடுப்பவர்களாகிறோம்.

(4) உண்மையில் விட்டுக் கொடுக்கும் சம்பவங்களாலேயே வாழ்க்கை உருவாகியிருக்கிறது. மிகமிகத் தூய்மையான, தன்னலமற்ற அன்பே அகிம்சையாகும்.

(5) ஒருவர் தாம் செய்த பாவத்திற்காக மனம் வருந்தினால், அவரது வருத்தமானது பாவத்தை எரித்து, அதன் தீய பலன்களைச் சக்தியற்றுப் போகும்படி செய்து விடுகிறது.

(6) நாம் மிருகங்களைப் போல் ஊர்ந்து செல்லாமல் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நடக்கவேண்டுமாயின், நம்மை நாமே வலுவில் ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்படுத்திக் கொள்ளவேண்டும்.

(7) பெண்ணினத்தைக் காப்பாற்றும் சக்தியில்லாத ஒரு சமூகத்துக்குக் கல்யாணம் செய்து கொள்ளவோ, வம்ச விருத்தி செய்யவோ யோக்கியதை கிடையாது.

(8) கடவுள் ஒருவரே என்று நான் நம்புகிறேன். அதனால் மனித சமூகம் முழுவதுமே ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன்.

—மகாத்மா காந்தி.

கல்வியும் மதுவிலக்கும்

மகாத்மா காந்திஜி

காங்கிரஸ் மந்திரிகள் பதவி ஏற்றபின், காந்தியடிகள் கல்வியைப்பற்றி அடிக்கடி பேசிவந்திருக்கிறார். ஒரு சமயம் பின்வருமாறு கூறினார் :

" நமது பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்ற வேண்டுமானால், இன்று 1935ஆம் வருஷத்து இந்திய அரசிலமைப்புச் சட்டத்தின்படி, மது வருமானத்தைக்கொண்டு தான் கல்விக்காகும் செலவை ஈடு செய்ய முடியும்; இந்த நிலைமை மிகவும் கொடுமையானது; விபரீதமானது. கல்வி சம்பந்தமான சிக்கல் என்று கருதக்கூடியது இதுவே. இதைக் கண்டு நாம் வெருளக்கூடாது. இச்சிக்கலை நாம் தீர்க்கத்தான் வேண்டும், தீர்ப்பதென்றால், என்னவானாலும் சரி, பூரண மதுவிலக்கு என்ற நமது லக்ஷயத்தை விட்டுக்கொடுக்க முடியாது. மது வருமானம் கிடைக்காவிட்டால் நம் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்க முடியாது என்ற எண்ணம் மிகவும் இழிவானது, வெட்கந்தருவது. கல்வியே கிடைக்காமல் செய்வதா அல்லது மது வருமானத்தைத் தேடுவதா என்ற இரண்டு தீமைகளில், கல்வியில்லாமல் செய்வதே குறைந்த தீமையென்று நாம் கருதவேண்டும். வெறும் புள்ளி விவரங்களைக் கண்டு திகைக்கக் கூடாது; இன்று நமது பிள்ளைகள் என்ன விதமான கல்வி பெறுகிறார்களோ அதே விதமான கல்வி போதித்துத்தான் ஆகவேண்டும் என்று எண்ணவும் வேண்டியதில்லை; இப்படி நாம் இருப்போமானால், கல்வி சம்பந்தமான இச்சிக்கலைக் கண்டு அஞ்சமாட்டோம்."

இவ்வாறு காந்தியடிகள் சொன்னபோது, கேட்டுக் கொண்டிருந்த அன்பரொருவர், " உயர்தரப் படிப்பு என்று சொல்லுகிறீர்களே, அதை அறவே நீக்கிவிட்டு, மெட்ரிகுலேஷன் வரையிலுள்ள கல்வி முழுமையும் கிராமப் பள்ளிக்கூடங்களில்தான் கற்பிப்பது என்பது உங்கள் உத்தேசமா ?" என்று மிக்க ஆச்சரியத்தோடு கேட்டார்.

[15—ஆம் பக்கம் பார்க்க]

மின்சார அதிர்ச்சிக்கு முதல் உதவி

(சோவியத் செஞ்சிலுவைச் சங்கம்)

✻

மின்சார அதிர்ச்சி, பொதுவாக மின்னல் தாக்குவதால், அல்லது மின்சாரம் பாயும் கம்பியைத்தொட நேர்வதால் ஏற்படுகின்றது. இதனால் பெரும்பாலும் பிரக்ஞை இழத்தலும், சுவாசம் சீர்கெட்டுத் தடைப்படுதலும், இருதயத்தின் சகஜமான இயக்கம் தடைப்படுதலும் நேருகின்றன.

அதிர்ச்சிக்கு ஆளான நபரை, மின்சாரக் கம்பியிடமிருந்து பிரித்தெடுப்பதே முதலில் செய்யவேண்டிய வேலை. ஆயினும் காப்பாற்றச் செல்பவர் தாக்குண்டவரைச் சுற்றிப் பத்து மீட்டர் தொலைவுக்குள் வெறுங் கால்களோடு செல்வது ஆபத்து. ஏனெனில் அந்தத் தரையிலும் (அதிலும் ஈரமாக இருந்தால்) மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும். அவர் ரப்பர் அல்லது ரப்பர் அடியிட்ட செருப்புக்களை அணிந்து கொள்வது நல்லது. செருப்பும் ஈரமில்லாது இருக்கவேண்டும். எந்த நிலையிலும் தாக்குண்டவரை வெறுங் கையால் தொடக் கூடாது; ஏனெனில் அவரது உடம்பின் மூலம் மின்சாரம் தாக்கக் கூடும். ஈரமில்லாத கம்பை, அல்லது உபயோகமில்லாத ஒரு பொருளைக் கொண்டு, தாக்குண்டவரைக் கம்பியிலிருந்து பிரித்தெடுப்பதே நல்லது.

தாக்குண்டவரைக் கம்பியிடமிருந்து பிரித்ததுமே, அவரை விபத்து நடந்த இடத்திலிருந்து அகற்றிவிட வேண்டும். அவருக்கு உயிர்ப்பூட்டும் நடவடிக்கையை உடனே தொடங்க வேண்டும். இதனை எவ்வளவு விரைவில் தொடங்குகிறோமோ அவ்வளவுக்கு அவரது உயிரைக் காப்பாற்ற வாய்ப்புண்டு.

உயிர்ப்பூட்டும் சிகிச்சை, தாக்குண்டவரின் சுவாசத்தையும் இருதயத் துடிப்பையும் மீட்கும் முயற்சியேயாகும். இதனைச் செயற்கைச் சுவாசத்தின் மூலமும், இருதயத்தை மறைமுகமாகப் பிசைந்து விடுவதன் மூலமும்செய்ய வேண்டும். இவற்றை இரண்டு பேர் ஆளுக்கொரு சிகிச்சையாக, ஏக காலத்தில் செய்யவேண்டும்.

"வாய்க்கு வாய்" சுவாசம் எனப்படும் செயற்கைச் சுவாச முறையே சுவாச கோசங்களை மீண்டும் இயங்கச் செய்வதற்கு நல்ல வழி. இதனை இவ்வாறு செய்ய வேண்டும்: தாக்குண்டவரை மல்லாந்து, படுக்க வைத்து

தலையைப் பின்புறம் சாய்க்கவேண்டும். காப்பாற்றுபவர் மூச்சை நன்ருக உள்ளே வாங்கிக் கொண்டு, தாக்குண்டவரின் வாயோடு வாய் வைத்து மூச்சை உள்ளே ஊத வேண்டும். இதனைத் தொடர்ச்சியாகச் சுவாசம் திரும்பும் வரை நிமிடத்துக்கு நிமிடம் (15—18) முறை செய்ய வேண்டும். இதே வேளையில் மற்ருெருவர் இருதயத்தைப் பிசைந்து விடுவதன் மூலம் அதின் இயக்கத்தை மீட்க முயல வேண்டும். இதனை நேர் முகமாகச் செய்ய முடியாது தான். எனவே, அவர் தமது வலது உள்ளங் கையைத் தாக்குண்டவரின் மார்பெலும்பின் கீழிருந்து மூன்ருவது பகுதியிலும், இடது உள்ளங் கையை வலது மார்பிலும் வைத்து, துரிதமாகவும், அழுத்தமாகவும் (நிமிடத்துக்கு 60 முறை) பிசைந்து விடவேண்டும். சுவாசமும், இருதயத் துடிப்பும் மீளும் வரையில், இவற்றைச் செய்ய வேண்டும். இதற்குச் சுமார் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் பிடிக்கலாம்.

—(நல்வழி)

[13-ஆம் பக்கத் தொடர்ச்சி]

“ஆம், உங்கள் உயர்தரப் படிப்பு என்பது என்ன? தாய் மொழியில் இரண்டே வருஷத்தில் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டியதை அன்னிய மொழியில் ஏழு வருஷ காலம் கஷ்டப்பட்டுக் கற்கும்படிச் செய்வதுதானே நீங்கள் சொல்லுகிற உயர்தரப்படிப்பு? அன்னிய மொழியில் பாடங்களைக் கற்கவேண்டிய பெருந் தொந்தரவிலிருந்து பிள்ளைகளுக்கு விடுதலை கொடுக்கலாம் என்று உறுதி செய்துகொண்டு, பிள்ளைகள் தங்கள் கை கால்களை லாபகரமான வழியில் பயன்படுத்த நீங்கள் கற்றுக்கொடுக்கும் பட்சத்தில், கல்வி சம்பந்தமான மேற்கூறிய சிக்கல் அன்றே தீர்ந்து; மதுவிலுல் பெறும் வருமானத்தைச் சிறிது தயக்கமும் இல்லாமல் விட்டுவிடலாம். ஆனல், முதலில் இவ் வருமானத்தை விட்டுவிட நீங்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்; அதன் பிறகே, கல்வி போதிப்பதற்கான முறைகளையும் வழிகளையும் சிந்திக்க வேண்டும். ஆகவே, முதல் வேலையை உடனே தொடங்குங்கள்” என்று காந்தியடிகள் கூறினர்.

—“ஹரிஜன்,”
21—8—1937.

கல்வித்துறை அறிவிப்புகள்

I. அரசாங்கம், 1969-70ஆம் கல்வி ஆண்டிலிருந்து பல்கலைக் கழக புகுமுகவகுப்பில் படிக்கும் எந்த மாணவனிடமிருந்தும் கல்விக்கட்டணம், அவர் பெற்றோர் வருடவருமானம், மற்றும் சாதி எவ்வாருயினும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வசூலிக்க மாட்டாது.

1. இந்தக் கட்டண சலுகைக்குத் தகுதியான மாணவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவராகவோ அல்லது இங்குக் குடியேறியவர்களாகவோ இருத்தல் வேண்டும்.

2. ஒதுக்கப்பட்ட பட்டியலிலுள்ள சாதியினர், பழங்குடியினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் இவற்றைச் சார்ந்த மாணவர்கள் கல்லூரிகளில் சேர, இடங்களை ஒதுக்கக் கோரும் உத்தரவுகள் தவருது பின்பற்றப்பட வேண்டும்.

உதவி பெறும் கல்லூரிகளுக்கு, பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளில்கட்டணமில்லாக் கல்வியைக் கொண்டு வருவதன் காரணமாக அவை இழக்கும் வருமானத்தை ஈடுசெய்யும் உதவித் தொகை சம்பந்தமான விதிகளும் அரசினரால் வெளியிடப்பட்டுள்ளன.

(கல்வி இலாக்கா. ஜி.ஒ.எம். எஸ்.எண். 639 தேதி 26-5-1969)

II. அரசாங்கம், பின்தங்கிய வகுப்பினருக்கு ஒரு புதிய இலாக்கா, துவக்கியிருக்கிறது. தற்சமயம் இந்த புதிய இலாக்கா, ஆட்சித்துறை கட்டிடத்தில் 'எழிலகம்.' சென்னை -5-இல் இயங்கி வருகிறது.

2. எதிர்காலத்தில் இந்திய அரசாங்கத்தின் தாழ்ந்த வருமானத் தொகுதி மற்றும் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் தொடர்புள்ள எல்லாக் கடிதப் போக்வரத்தும் பின்தங்கிய வகுப்பினருக்கான இயக்குநர், சென்னை—5 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இதே முறையில் பின் தங்கிய வகுப்பினர் மற்றும் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினருக்கான மாநில கல்வி உதவித்தொகை கடிதத் தொடர்புகளும் பின்தங்கிய வகுப்பினருக்கான இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

3. ஒதுக்கப்பட்ட பட்டியலிலுள்ள சாதியினர், பழங்குடியினர் தொடர்புள்ள கடிதப்போக்குவரத்து ஹரிஜனநல இயக்குநர், சென்னை 5 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

(பள்ளி கல்வி இயக்குநர் நடவடிக்கைகள்—டி. டிஸ் எண். 115555-69 தேதி 2–7–69)

—"தமிழகக் கல்வி"

காந்தீயச் சோலையில் கவிக்குயில்

1914-ஆம் ஆண்டு லண்டனில் ஒரு நாள். தரை மீது விரிக்கப் பட்ட ஒரு ஜமுக்காளத்தின் மீது சென்னிற மேனியாய் வழுக்கைத் தலையுடன், குள்ளமான ஒரு மனிதர் உட்கார்ந்து கொண்டு பிசைந்த உணவைப் புசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அந்த அறைக்கு அவரை நோக்கி வந்து கொண்டிருந்த ஒருமாது, அவரைப்பார்த்து களுக்கென்று சிரித்து விட்டாள். ஒரு புன்னகையால் பதிலளித்த அந்த மனிதர் 'ஓ, நீங்கள் திருமதி நாயுடு தானே, வாருங்கள், என்னுடன் சேர்ந்து சாப்பிடுங்கள், என்று அவரை அழைத்தார். 'வேண்டாம், பரவாயில்லை. உங்களுக்கு நன்றி' என்று கூறிய அந்த மாது, 'என்ன அருவருப்பான சாப்பாட்டு விடுதி' என்று தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார். பிறகு சிறிது நேரம் அவ்விருவரும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

அந்த மனிதருக்கும், அந்த மாதுக்கும் ஏற்பட்ட மானசீகமான நட்பு ஆரம்பமாவதற்கு வித்திட்டது லண்டனில் ஏற்பட்ட அந்த முதல் சந்திப்புதான்.

உலகம் போற்றும் உத்தமரான அமரர் மகாத்மா காந்தி தான், பிற்காலத்தில் இந்தியாவின் வானம்பாடி என்று புகழப்பட்ட கவியரசி திருமதி சரோஜினி நாயுடு வைத் தான், தன்னுடன் கூட உணவைப் பகிர்ந்துகொள்ள அவ்வாறு அழைத்தவர். அன்று ஏற்பட்ட நட்பு 1948 மகாத்மா மறையும் வரை நீடித்திருந்தது.

முதல் சந்திப்பு

1914-ல் லண்டனில் திருமதி சரோஜினி நாயுடு சமூக சேவையில் ஈடுபட்டிருந்த காலம். தென்னுப்பிரிக்காவிலிருந்து காந்திஜி இந்தியா வரும் மார்க்கமாக, வழியில் லண்டனில் தங்கப்போகிருர் என்று கேள்விப்பட்ட, திருமதி நாயுடு, காந்திஜியைப் பார்க்க ஆவலுள்ளவராய் அவர் தங்கியிருந்த கென்ஸிடன் நகருக்குச் சென்று அவரை முதன் முதலாகச் சந்தித்த போது ஏற்பட்ட சம்பாஷணைதான் மேலே கூறப்பட்டது. திருமதி நாயுடுக்கு கோகலே மிகவும் நெருங்கிய நண்பர். அது போல காந்திஜியிடம் நட்புக் கொள்ள அவர் ஆவலாயிருந்தார். அன்று காந்திஜி, திருமதி நாயுடு இருவரின் நட்புக்கு வித்திட்ட இடம் லண்டன் நகரம் தான். அந்த நட்பானது பிற்காலத்தில் ஆல விருட்சம்போல் வளர்ந்து காந்திஜி இறக்கும் வரை திருமதி நாயுடு அவரின் நம்பிக்கைக்கும்.

அன்புக்கும் பாத்திரமான முக்கிய ஸ்தர்களில் ஒருவராகவே திகழ்ந்தார்.

1869-ம் ஆண்டு பிப்ரவரி 13-ம் தேதி ஹைதராபாத் நகரத்தில் ஒரு வங்காளி குடும்பத்தில் திருமதி சரோஜினி பிறந்தார். முஸ்லிம் கலாசாரத்தைப் பின்னணியாகக் கொண்டு, மேற்கத்திய கல்வி முறையை ஆரம்பத்தில் பயின்றார். திருமதி சரோஜினியின் தகப்பனார் டாக்டர் அகோர்நாத் சட்டோபாத்யாயா; ஹைதராபாத்திலுள்ள அப்போதைய நிஜாம் கல்லூரியில் ரசாயனப் பிரிவில் பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் இருந்தார். அவர் ஒரு பழுத்த தேசியவாதி. அரசியலிலும் ஈடுபாடு கொண்டிருந்ததனால் அவர் வாழ்க்கையும் நிம்மதியில்லாமலே கழிக்க வேண்டியிருந்தது.

கவிதையில் மேதை

திருமதி சரோஜினி தன்னுடைய 12-வது வயதில் ராஜதானியிலேயே மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் முதலாவதாகத் தேறினார். தன்னுடைய 17-வது வயதில் மேல் படிப்புக்காக லண்டனுக்குச் சென்று அங்குள்ள கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலுள்ள அரசர் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். இந்தியாவுக்குத் திரும்பி டாக்டர் கோவிந்தராஜுலு நாயுடுவை மணம் புரிந்து கொண்டார்.

திருமதி சரோஜினி 13 வயது சிறுமியாயிருக்கும் போதே கவிதைகளைப் புனைய ஆரம்பித்து விட்டார். 1300 வரிகள் கொண்ட "ஏரிக்கரைச் சீமாட்டி" என்ற கவிதை அவர் தன்னுடைய 13-வது வயதில் புனைந்த முதல் கவிதையாகும். சரோஜினி தன்னுடைய இளம் பிராயத்தில் புனைந்த கவிதைகளில் பல கட்டாக்கிலிருந்து வார இதழாக வெளி வந்து கொண்டிருந்த 'ஸ்டார் ஆப் உட்கல்' என்ற பத்திரிகையில் பிரசுரமாகிக் கொண்டிருந்தன.

இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருக்கும் போது பிரபல கவிதை, இலக்கிய விமரிசகரான எட்மண்ட் கோஸேயுடன் நட்பு ஏற்பட்டது. கோஸேயின் நட்புதான் திருமதி சரோஜினியைக் கவிதையின் 'பொன் வாயிலுக்கு' இட்டுச் சென்றது. 1905-ல் திருமதி சரோஜினியால் புனையப்பட்ட 'பொன் வாயில்' என்ற ஒரு கவிதைத் தொகுதி இலக்கிய வட்டாரத்திலேயே ஒரு பரபரப்பினை ஏற்படுத்தியதுடன் வெகுவாகப் பாராட்டப்பட்டதாகும்.

அவரால் தொடர்ந்து புனையப்பட்ட கவிதைத் தொகுதிகளான "காலப்பறவை" "உதய காலச் சிறகு" "சிதைந்த சிறகு" ஆகியவை அவருடைய கவிதா மேதைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாக விளங்கியதுடன், ஒரு தலைசிறந்த கவியரசி என்ற புகழையும் நிலை நாட்டி விட்டன.

பிரமிக்கத் தக்க அறிவுக்கூர்மையுடனும், கருத்துச் செறிவுடனும், சிந்தனை சக்தியும், மிளிரும் நகைச்சுவையும் மனிதாபிமான உணர்ச்சியும் திருமதி சரோஜினியின் கவிதைகளில் பொதிந்து காணப்பட்டன.

அரசியலில் தீவிரமாக ஈடுபாடு கொண்ட பிறகும் கூட திருமதி சரோஜினியின் மனிதாபிமான உணர்ச்சி அவரது வாழ்க்கையில் தொடர்ந்து கொண்டே வந்தது.

அரசியலில் தீவிரம்

1904-ம் வருடம் டிசம்பரில் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு பம்பாயில் நடைபெற்றது. அம் மாநாட்டில், "சமூகத்தில் பிற்பட்ட நிலைமை, சோம்பேறித்தனம் ஆகிய தளைகளைக் களைந் தெறிந்து விட்டு பெண்கள் முன்னேற வேண்டும்" என்று திருமதி ரமாபாய் ரானடே விடுத்த வேண்டு கோள் திருமதி சரோஜினியைப் பெரிதும் கவர்ந்து விட்டது. அதே மாநாட்டின் தேச பக்திமிகுந்த ஒரு பாடலை இயற்றி அவரே பாடியும் காட்டினார். இந்தியப் பெண்மணிகளின் முன்னேற்றத்திற்குத் திருமதி சரோஜினி ஒரு முன்னோடியாக விளங்கினார். திருமதி சரோஜினி நாயுடு ஒரு பிரம்ம சமாஜவாதியும் கூட. 1906-ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார் சுதேசி இயக்கம் உச்சகட்டத்தை அடைந்திருந்த காலம் அது. 1916—ல் யுத்த தளவாடங்கள் சட்டத்தைப்பற்றியும், இந்தியாவுக்கு சுயாட்சி வழங்குதல் பற்றியும் பேசினார். 1917-ல் காங்கிரஸில், காங்கிரஸ் லீக் சீர்திருத்த திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதில் தீவிரமாகப் பாடுபட்டு நிறைவேற்றினார்.

சுதந்திரப் போராட்டம்

தன்னுடைய குடும்ப விவகாரங்களையும், இலக்கியச் சிந்தனைகளையும் அறவே நீக்கிவிட்டு, இந்தியாவின் சுதந்திரத்திற்காக அரும் பாடுபட்டவர் திருமதி. சரோஜினி நாயுடு. அடிக்கடி இருதய நோயினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தும் கூட, இந்தியாவின் விடுதலைக்கு அயராது பாடுபட்டவர். சில வருடங்கள் பம்பாயில் வசித்தார். அப்போது ஜின்னாவுடனும், உம்மர்ஸோபானியுடனும் நெருங்கிப் பழக நேர்ந்தது. அப்போது அவர்களிருவரும் தீவிர காங்கிரஸ் வாதிகள். ஸோமானி காலமானவுடன் காந்திஜிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் 'மனிதர்களுள் ஒரு இளவரசர்' என்று வர்ணித்து எழுதி இருந்தார். அதே மாதிரி ஜின்னாவுடன் நெருங்கிப் பழகினாலும் தன் கொள்கைகளை விட்டுக் கொடுக்கமாட்டார். ஒருவருக்கொருவர்நன்ருகப்புரிந்து கொண்டு தங்கள் சுயகௌரவத்தை விட்டுக் கொடுக்காமலே பழகி வந்தனர். அரசியல் சம்பந்தமாக ஜின்னாவுடன் விவாதிக்கும்போது தன்னுடையகொள்கைகளைப் பச்சையாக, வெளிப்படையாகவே எடுத்துச் சொல்லுவார்.

1917-லேயே காந்திஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான முக்யஸ்தர்களில் ஒருவராகக் கருதப்பட்டார் திருமதி நாயுடு. அவர் ஒரு நல்ல மேடைப் பிரசங்கி. பொது மேடைகளில் தன்னுடைய பேச்சினால் மக்களைக் கவர்ந்தவர். காங்கிரஸ் இயக்கத்தில் காந்திஜியின்

விளைமதிக்க முடியாத ஒரு பொக்கிஷமாகவே விளங்கி வந்தார்.

அக்கிராசனர் பதவி

1925-ல் இந்திய தேசிய காங்கிரஸின் அக்ராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது வங்காளத்தில் பிரபல காங்கிரஸ் தலைவர் திரு. ஸி ஆர். தாஸ் இறந்து விட்டார். அவர் மறைவு வங்காளத்திற்கே பெரிய அதிர்ச்சியாக ஆகிவிட்டது. குறிப்பாக வங்காளத்தில் காங்கிரஸின் செல்வாக்கு மங்காமல் இருப்பதற்குத் திருமதி நாயுடு காங்கிரஸ் அக்கிராசனராயிருக்கும்போது அரும்பாடுபட்டார்.

தீண்டாமையை ஒழிப்பதில் திருமதி நாயுடு முக்கிய பங்கு பெற்றவர். காந்திஜி தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் திருமதி நாயுடுக்கு முக்கிய ஸ்தானத்தை அளித்திருந்ததுடன், அவர் யோசனையும் கேட்பார். சில சிரமம் மிகுந்த பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் திருமதி நாயுடுவை காந்திஜி அணுகுவார்.

ஒரு பெரிய மலை போல் தோளோடு தோள் நின்று மகாத்மாவுடன் சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் கலந்து கொண்டு அநேக தடவை பிரிட்டிஷ் சர்க்காரின் விருந்தாளியாகச் சிறை சென்றிருக்கிறார். காந்திஜி பூனாவில் ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்தபோது திருமதி நாயுடுவும் அவருடன் அப்போது சிறையிலிருந்தார். அங்கு தான் காந்திஜியின் அந்தரங்க காரியதரிசியும், நண்பருமான திரு. மகாதேவ தேசாயும், கஸ்தூரிபாயும் காலமானார்கள். ஆறாத துயரத்திலாழ்ந்திருந்த மகாத்மாவுக்கு சரோஜினி நாயுடு தன்னுடன் கூட அப்போது சிறையிலிருந்தது பெரும் ஆறுதலாக இருந்தது. ஆகாகான் மாளிகையில் அடிக்கடி அன்னை கஸ்தூரிபாயுடன் திருமதி நாயுடு பொழுது போக்குக்காக 'காரம்' விளையாடுவதுண்டு. அப்போது அன்னை கஸ்தூரிபாயை உற்சாகப்படுத்துவதற்காக வேண்டித் தன்னுடைய ஆட்டத்தினை வேண்டுமென்றே இழந்து 'அன்னையை' வெற்றிபெறச் செய்வாராம். சிக்கனம் என்பதே என்ன என்று தெரியாத திருமதி நாயுடு, நல்ல சாப்பாடு, கவர்ச்சியான உடை, நண்பர்களுடன் அளவளாவுதல் ஆகியவைகளை மிகவும் விரும்புவார்.

கவர்னர் பதவி

1947-ல் இந்தியா சுதந்திரமடைந்தவுடன் உத்திரப் பிரதேசத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். இந்தியாவில் முதன் முதலாக ஒரு பெண்மணி அம்மாதிரியான ஒரு ஆடம்பரமான பதவிக்கு நியமிக்கப்பட்ட பெருமை திருமதி சரோஜினி நாயுடுவையே சாரும். 1948-ல் காந்திஜி சுடப்பட்டு மரணமடைந்ததாலும், இந்தியா பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டதாலும் மிகவும் மன வியாகூலமடைந்து, 1949-ல் திருமதி நாயுடு மரணமடைந்தார். ஒரு தெய்வீக சக்தி காந்திஜியையும் திருமதி நாயுடுவையும் அன்யோன்யமாகப் பிணைத்திருந்தது. ஆனால், காலன் யாரை விட்டான். மரணம்தான் அவர்களை விடுவித்தது.

—"தினமணி"

நல்ல கல்வி

அழகரடிகள்

கல்வி, மனப் பழக்கம் :

மக்களை விலங்குகளிலிருந்து வேறு பிரிப்பது கல்வி ; காரணம், மக்களுக்கே சிறப்பாக அமைந்துள்ள மன நலத்தைக் கல்வி பெருக்குகிறது. "வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்."

கற்றல் சிந்தித்தல் :

ஆழ்ந்து சிந்திக்கும் மனப் பயிற்சியே 'கல்வி' என்பது. 'கற்றல்' என்றாலும், 'கல்வி' என்றாலும், 'கற்பு' என்றாலும், சொற்பொருள் ஒன்றே. இதனை ஓர் உவமையாகத் தெய்வத் திருவள்ளுவர் விளக்கிக் காட்டுவார். மணற்கேணி தோண்டிய ஆழத்தினளவு நீர்ஊறும் எனவும், மனம் படைத்த மாந்தர் ஆழ்ந்து சிந்திக்குமளவு அறிவு ஊறும் எனவும் அப்பெருமான் தெரிவிப்பார்.

சிந்திப்பது எதனை ?

ஆழ்ந்து சிந்திப்பது எதனை ? நூல்களைப் படித்தாலும் அவற்றில் உள்ள கருத்துக்களையே ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. நூல்களில் உள்ள கருத்துக்கள், உலக இயற்கைகள், மக்களின் வாழ்க்கையியற்கைகள் முதலியனவே. அப்படியானால் ஆழ்ந்து சிந்திப்பதென்பது, பொதுவாக இயற்கையை என்றே கொள்ளலாம்.

இயற்கையிலுள்ள பொருள்களை இயன்றவரை சிந்தித்து நலம்பெறுவோரே, கல்வியாளர் ! அதற்கு உதவுவனவே நூல்கள் !

சிந்தனைச் செல்வம் :

பிறவியில் இத்தகைய சிந்தனைச் செல்வம் தலையானது. மற்றவை இதற்கு நிகரானவையல்ல.

நுணுகி நுணுகி இயற்கையை ஆழ்ந்து சிந்திப்பவர், இயற்கைப் பொருள்களைப் பயன்கொண்டு வாழும் வகைபற்றியும் அறிந்து கொள்வர். மக்களிடமும் சிற்றுயிர்களிடமும் பழகும் வகைகளையும் உன்னியறிந்து, எங்கும் மகிழ்ச்சியும் நலமும் விளைவிப்பர்.

புலமையும் புலமைத் தொழிலும் :

உடம்பின் உட்கருவிகளும் புறக்கருவிகளும் இதற்கு மிகவும் பயன்படும். ஆராய்ச்சியால் புலன்களைப் பயன்படுத்தி, உலகப் புலன்களை நுனித்தறிந்து, மக்கள் புலவராவார்கள். அத்தகையோரை மற்றவர் காணும்போது மகிழ்ச்சியும் அவர் பிரியும்போது ஏக்கமும் உண்டாகும். உலகுக்கு உவப்பை உண்டாக்குவது புலவர் தொழில் !

புலவன்மார் பார்வை, அறிவை உமிழும். அல்லாதார் கண்கள் வெறும் புண்களென்றே எண்ணப்

படும். அவர்கள் எங்கே சென்ருலும் அந்தந்த இடமும் ஆராய்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் பயன்படுமாதலால், எல்லாம் அவர்கட்கு உரிமையிடமே. தம்மைப்போல் மற்றவர்களையும் பயிற்சி செய்வித்து இன்புறச் செய்யும் ஆற்றல் அக் கல்வியாளரின் இயல்பு!

பிறவிதோறும் இந்நிலைமை பெருகி இன்புறத்தும். ஆழ்ந்த சிந்தனையை எவ்வளவு காலம் செய்து வந்தாலும் அது மேன்மேலும் ஆழ்ந்து செய்வதோடு, முன்செய்த சிந்தனை பின் சிந்தனைக்கு உதவியாகவும் இருக்கும். ஒரு பிறவிச் சிந்தனை பல பிறவிக்கும் உதவும். அதனால் பிறவியின் இறுதி வரையிற் சிந்திப்பதும் நன்மையே.

செய்கையாளர் யார்?

சிந்தனை என்ருலும் எண்ணம் என்ருலும் பொருந்தும். பலகாலும் எண்ணுதல், உருச்செய்தல் என்றும் கூறப்படும். எண்ண எண்ண எண்ணம்செயலாகும். கற்ருேர் அதனல் செயலாளராகின்றனர். கல்லாதார்க்கு இச் செயலறிவோ செய்கைளோ இல்லை. செய்வோர் எவரோ அவரே கற்ருேர்! எண்ணத் தெரிந்தவர்! சிந்தித்துச் செயலாற்றுவோர்!

எண்ணும் எழுத்தும்:

ஒரு பொருளைப்பற்றி எண்ணி வந்தால், அப் பொருளைப் பற்றிய சிந்தனையடுக்கு, பல துறை உண்மைகளை அப் பொருளிலிருந்து விரித்துப் பல கலைகளை உண்டாக்குகிறது. அவற்றை எழுத்தில் வடித்தால், பல வகையான கலை நூல்களாகின்றன. அக் கலைகளும் எழுத்துக்களும் மக்களுக்கு உண்மையான அகக் கண்களாகும்.

மேன்மேற் கல்வி:

உலகியற்கை அவ்வளவையும் ஒரு மனிதர் ஒரு பிறவியில் ஆழ்ந்து எண்ணி நிறைவு பெற்றுவிட முடியாது. சூழலில் உள்ள சிலவற்றை வாழ்வுக்குப் பயன்படு முகமாகக் கற்றுக்கொள்ளுதல் இயல்வதாகும்.

கற்பவை கற்றபின், அதுவும் பெரியோர் துணைகொண்டு ஐயந் திரிபுகளாகிய கசடுகள் அறக் கற்றபின், நடக்கையிற் பயன்படுத்துதல் வேண்டும்: கற்றபடி நடக்கை கொண்டால், அது வாழ்க்கைக்கு நலம் செய்வதோடு, மேன்மேற் கல்வி பெறுதற்கும் உதவும். கற்ற வரையில் நடந்து நடந்தே தெரிந்தோர், மேன்மேற் கல்விகளைப் பெறுகின்றனர். நடக்கையில் தெளிந்து அப்படிப் பெறுங் கல்வியே உண்மைக் கல்வி!

குறிக்கோளும் அடைவும்:

கற்றலைக் 'கல்வி' என்று சொல்லுவதனுலும், பெரும்பாலும் 'கற்பு' என்பது ஒருவனைப் பற்றி ஓரகத் திருப்பதாய் வழங்குவதனுலும், கல்வியின் குறிக்கோளும் அடைவும் இனிது விளங்குகின்றன.

உலக இயற்கைப் பொருள்களை ஆழ்ந்து எண்ண எண்ண, அப்படி எண்ணுவோர். அவற்றின் அடிப்

படையையே அடைகின்றனர். அதாவது அவற்றின் பாதத்தையே தொடுகின்றனர்.

அந்த அடிப்படை என்பது, இயற்கைப் பொருள்களுக்கும் மூலமாய், அவை யெல்லாவற்றிலும் கலந்து நிறைந்து அவற்றை ஓர் ஒற்றுமையில் நெறிப்படுத்தி நிற்பதாய், இவற்றின் இயக்கங்களுக்குக் காரணமாய், எல்லாம் வல்லதாய், எல்லாம் நிலை மாறும்போதும் தான் நிலை மாறாததாய், தனக்கு உவமை இல்லாததாய், தன்னைத் தனக்கு மேல் நின்று இயக்குவதும் இல்லாததாய்த் தனிப்பெருந் தலைமையில் திகழும் ஒரே ஒரு பேரறிவுப் பொருளாகத் தோற்றுகிறது. அதனையே பெரியோர், 'கடவுள்' என்று துணிந்து எல்லாம் வல்ல அதன் முழு முதல் ஆற்றலைத் தெளிந்து, உண்மை அம்மையப்பராய்க்கண்டு அதனில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆதி பகவனாகிய இந்த ஆதிமூலத்தையே உலகம் முதலாக உடையதென்று, உலகுக்கு குரவர் திருவள்ளுவரும் தெரிவித்தார். திருவள்ளுவர் வாக்கு மறைவாக்கு என்று பேர் பெற்றது!

இம் முதல்வன் பாதமே பற்றி நின்றாரைப் பற்றா பாவம் என்று சமய குரவர் திருஞான சம்பந்தரும் வாக்களித்தார்

இப்படி ஒருவனைப் பற்றி ஒருள்ளமாயிருத்தல் 'கற்பு' எனப்படும். கல்வியின் பயன், அப்பேரறிவுப் பொருளின் நற்றாள் தொழுதலே என்று மக்கள் துணிந்து, வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக் கொள்வார்களாக! துணையோடு கூடிய நிம்மதியும், உள்வீறு பெற்ற அமைதியும், செயலாற்றல் சிறந்த வல்லமையும், வள்ளன்மையும் ஓங்கியவர்களாய் விளங்குவார்களாக!

பயனற்ற கல்வி:

அந்நிலை பெருத கல்விகள் பொருளற்ற கல்விகளாய் வீண்படும்; அத்தகைய கல்வியைக் 'கல்லாமை' யென்றே கூறிவிடலாம். அது நற்கேள்வியும் ஆகாது, பெறுவது நற்பேறும் ஆகாது.

கற்றுங் கல்லாமையான அதனாற் குற்றங் கடிதல் இயலாது; பெரியோர் துணையுங் கூடாது.

மக்கள் சிற்றினமாய், எதனையுந் தெரிந்து செய்ய மாட்டாதவராய், ஆற்றல் அடையாதவராய், காலமும் இடமும் தெளிந்து நடக்க இயலாதவராய், ஆய்ந்து செயல் படாதவராய், சூழலைப் பயன் கொள்ள அறியாதவராய், வாழ்க்கையை வீணாக்கிக் கொள்வர்.

விரும்பத்தக்கது:

உலகம் மிக ஆழ்ந்த சிந்தனையால் நற்கல்வி கேள்விகளும் அறிவும் உடையதாய் விளங்குக என விரும்புவோம்.

—"சிரணி"

சுயமாக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்

இளைஞர்களுக்கு மந்திரி டாக்டர் ராவ் யோசனை

❋

மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரை

●

வன்செயலை அறவே நீக்க வேண்டுமென வலியுறுத்தல்

சமூக அபிவிருத்தியுடன் தனி நபர் அபிவிருத்தியும் இணைந்து வரும் ரீதியில் சோஷலிஸ மனோ நிலையை வளர்த்துக் கொள்ளுமாறு இளைஞர்களை யூனியன் கல்வி மந்திரி பேராசிரியர் வி. கே. ஆர். வி. ராவ் கேட்டுக் கொண்டார்.

மதுரை சர்வ கலாசாலை பட்டமளிப்பு விழா உரையை அவர் இன்று நிகழ்த்தினார். சர்கலாசாலையிலிருந்து வெளியேறும் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் நாட்டு மக்கள் சம்பந்தமாக உள்ள பொறுப்புகளை மத்திய மந்திரி நினைவுபடுத்தினார். மக்கள் தாங்கள் செலுத்தும் வரிகளின் மூலம் அவர்களுக்கு உதவியுள்ளனர் என்றார். கொடுக்காமல் பெற்றுக் கொள்வது என்பது ஒழுங்கீனமாகும். தார்மீகப் பாதையில் செல்லவே நாம் அனைவரும் விரும்புறோம். என்பது நிச்சயம் என்று திரு. ராவ் குறிப்பிட்டார். படித்தவர்கள் சமூக நலனுக்காக தங்கள் திறனைப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

கல்வியின் மூலம் சமூகப் பொறுப்பு உணர்ச்சி ஏற்படவேண்டும். தனி நபர் உரிமைகளை மட்டுமின்றி, சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் கல்வி உணரச் செய்ய வேண்டும் என்று மத்ய மந்திரி வலியுறுத்தினார்.

இளைஞர்கள் தனியாகவும் கூட்டாகவும் தங்களது நடத்தையை ஒழுங்கு படுத்திக்கொள்ள வேண்டும். குறைகளை எடுத்துக் கூறும்

போது, இளைஞர்கள் அஹிம்சையைப் பின்பற்றுவது அவசியம். வன்செயல் சூழ் நிலையை ஊக்குவிக்க முற்படுவது முற்போக்கு சக்திகள் பலவீனமடைய வழி வகுக்கும். தேசிய ஒருமைப்பாட்டுக்கு அபாயத்தை ஏற்படுத்தும், எனவே எத்தகைய உன்னத நோக்கமாக இருந்தாலும் சரி, இளைஞர்கள் வன்செயலில் ஈடுபடக் கூடாது. இந்தியாவில் புரட்சி பாரம்பரியம் அஹிம்சையின் அடிப்படையில் அமைந்தது என்பதை இளைஞர்கள் நினைவிற் கொள்ள வேண்டும்.

அகிம்சை ஆயுதம்

மகாத்மா காந்தியைக் காட்டிலும் பெரிய புரட்சி வாதியை இந்தியா பார்த்ததே இல்லை. பெரிய ஏகாதிபத்யத்தையே அவர் தலை வணங்கச் செய்தார். காந்தி நூற்றுண்டு வருடத்தில் நமது மக்கள், பிரதானமாக இளைஞர்கள் அஹிம்சையைப் பின்பற்ற பிரதிக்ஞை எடுத்துகொள்ள வேண்டும். இந்த வலிமை மிக்க ஆயுதத்தைப் பயன்படுத்தி, சமுதாயம் விரும்பும் புரட்சிகரமான மாறுதல்களைத்தையும் ஏற்படச் செய்யவேண்டும்.

இளைஞர்களையும் முதியவர்களையும் தற்போது எதிர்நோக்கியுள்ள அநேக பிரச்னைகளை விஞ்ஞான ரீதியிலும், ஆக்க பூர்வமாகவும் அணுக வேண்டும். மொழி வெறி, ஜாதி வெறி, பிராந்திய உணர்ச்சி, வகுப்பு வாதம் போன்ற பல பிரச்னைகள் சோஷலிஸ சமுதாயத்திற்கு மட்டுமின்றி, பொருளாதார முன்னேற்றத்துக்கும் எதிரிகளாகும். இத் தீய சக்திகளை விஞ்ஞான ரீதியிலும், தர்க்க ரீதியிலும், நேர்மையான வழியிலும் மட்டுமே நாம் எதிர்த்துப் போராட முடியும். அதே சமயத்தில் தொழில் வளர்ச்சியிலும் உதவ முடியும். இக் கடமையில் படித்தவர்கக்ளாக இருந்த போதிலும் முதியவர்கள் தவறிவிட்டனர். எனவே இளைஞர்கள் காந்திஜி, நேரு சகாப்தத்துக்குச் செல்ல வேண்டும். பொருளாதார, சமூக, இதர பிரச்னைகளை விஞ்ஞான ரீதியில் அணுகி நாட்டுக்கு வழி காட்டவேண்டும்என்று டாக்டர் ராவ் தொடர்ந்து குறிப்பிட்டார்.

கடும் உழைப்பு

வறுமையை எதிர்த்துப் போராடவும், பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தவும், உற்பத்தியைப் பெருக்கவும், பெரும் பகுதி ஏழை மக்களுக்கு கிடைக்கச் செய்யவும் கடும் உழைப்பும், கட்டுப்பாடும் தேவை என்று அவர் வலியுறுத்தினர்.

பொருளாதார அபிவிருத்தியின் மூலமே வேலையின்மை பிரச்னைக்குத் தீர்வு காண முடியும். இளைஞர்களின் சக்தி பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்குப் பயன்படுத்த வேண்டும். வீண் கிளர்ச்சிகளில் சக்தியைச்சிதற விடக் கூடாது என்று டாக்டர் ராவ் அறிவுறுத்தினர்.

சிறு தொழில் அல்லது வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் தாங்களாகவே வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதைப் பற்றி சிந்திக்குமாறு இளம் பட்டதாரிகளை அவர் கேட்டுக்கொண்டார். புதிய தொழில் முயற்சியை மேற்கொள்ள திறமையும், கூட்டாகப் பாடுபடும் மனப்போக்கும் அவசியம் என்றார். இத்துறையில் பாங்கு தேச உடமையை அவர்கள் பூர்ணமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

கல்வி முறை

வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிக்கும்பொருட்டு கல்வி முறையை மாற்றி யமைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் கருதினார். எஞ்சினியரிங், இதர தொழில் படிப்புகளில் மேற் கொண்டதைப் போன்று தொழில் அல்லாத படிப்புக்கும் அட்மிஷன் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது அவசியமாகலாம் என்று அவர் கூறினர். ஆனல் பிற்பட்ட பகுதியினரின் நலன்கள் பாதிக்கப்படாதவாறு கவனித்துக் கொள்ளவேண்டும் என்றார்.

படித்து வேலையில்லாதவர்களுக்காக ஒருவித வேலையின்மை இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்தார். இத்தகைய திட்டங்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் உள்ளன என்றார்.

—"தினமணி"

உலகத்துப் பழமொழிகள்

உள்ளத்தோடு போராடுவதே உயர்ந்த போராட்டம்.

—அராபியா

எப்படிப்பட்ட முட்டாளும் பணத்தைச் சம்பாதித்துவிடலாம்—அதை ஒரு புத்திசாலியால்தான் காப்பற்ற முடியும்.

—அர்மீனியா

ஒவ்வொரு பொய்யும் ஒவ்வொரு பல்லைத் தட்டிவிடுவதாக இருந்தால்—அநேகருக்குப் பல்லே இருக்காது.

—ஸ்வீடன்

பணம் பேசுகிறது—நாய்கள் குரைக்கின்றன.

—ஹங்கேரி

சிம்லா மலைப் பயணம்

[தி. சா. ராஜு]

காஸ்காவிலிருந்து சிம்லாவுக்கு ரயில் மூலமும், நெடுஞ்சாலை வழியாகவும் செல்லலாம். இந்த ஐம்பத்து மூன்று மைல்களையும் ரயிலில் கடந்து செல்லுவது குழந்தைகளுக்கும், இளங் காதலர்களுக்கும் தனி அனுபவம். குறுகிய ரயில் பாதை, அகலம் குறைந்த பொம்மை ரயில், வழியில் சலசலக்கும் நீரோடை, அருவி, குகைப் பாதை கூடவே நெடுஞ்சாலையும் ஓடி வருகிறது. காலையில் மூன்று ரயில்கள் இரண்டு மணி இடைவெளியில் புறப்படுகின்றன. மாலையில் அவை திரும்பி வருகின்றன. இடையில் ரயில் ஏதும் கிடையாது.

சிம்லாவுக்கு டில்லி, அம்பாலா, கால்கா ஆகிய இடங்களிலிருந்து டீலக்ஸ் வண்டிகள் கூடச் செல்லுகின்றன. அரியானா எல்லையைக் கடக்கும் இடத்தில் போலீஸ் ஜபர்தஸ்து அதிகம். உணவுப் பொருள்களை ஹிமாசலப் பிரதேசத்திற்குக் கொண்டு செல்லத் தடை உள்ளது. அதே போல் திரும்பும் வண்டிகளை மதுவகைக் கடத்தலுக்காகச் சோதிப்பார்கள். மொத்தத்தில் வெகு நேரம் பஸ்கள் இங்கு நிறுத்தப்படுகின்றன.

வளைந்து மலையைச் சுற்றிச் செல்லும் பாதை. இரு புறமும் உயர்ந்த பைன் மரங்கள், அந்தி மந்தாரை மலர்ப் புதர்கள், கறிவேப்பிலை ஆகியவை இருக்கின்றன. வழியில் 'டிக்லி' என்ற சிற்றூரில் பஸ் நிற்கும். இங்கே இறைச்சி, ஊறுகாய்கள் விசேஷம். மலிவான விலையில் மதுபானம் கிடைக்கும். இங்கு வீசும் காற்றிலேயே ஒரு போதை தரும் நெடி!

கால்காவிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ள 'தரம்பூர்' என்ற ரயில்நிலையம் முக்கியமானது. இங்கிருந்து கஸௌளிக்கும், ஸுபாத்துவிற்கும் அவுட் ஏஜன்ஸி பஸ்கள் செல்லுகின்றன. மூன்று மைல் வடக்கே 'தக்ஷாய்' என்று மலைக்குடியிருப்பு. தரம்பூரில் நேயர்கள் இறங்கியே ஆக வேண்டும்.

மது அருந்தும் பழக்கம் உள்ள எவரும் கஸௌலி, ஸோலன் ஆகிய ஊர்களின் பெயர்களை மறக்க மாட்டார்கள். டையர் மேகின், (தற்போது) மோஹன் மேகின் நிறுவனத்தாரின் டிஸ்டிலரி கஸௌளியிலும், ப்ரூயரி ஸோலன் நகரிலும் உள்ளன. மிக உயர்ந்த மது வகைகள் இங்கு தயாராகின்றன.

யுத்த காண்டத்தில் ஒரு கதை உண்டு. இந்திரஜித்தின் பிரம்மா

ஸ்திரத்தினால் கட்டுண்ட இராம லட்சுமணர்களையும், வானர வீரர்களையும் உயிர்ப்பிப்பதற்காக ஆஞ்சநேயர் சஞ்சீவி பர்வதத்தையே இலங்கைக்குத் தூக்கிச் சென்றதாக ஒரு விவரம் உண்டு. இந்தக் கஸௌளி பகுதியும் அந்த வகையைச் சேர்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். இதன் தட்ப வெப்பம், காற்று, சூழ்நிலை, மரங்கள் அனைத்தும் நோயைக் குணப்படுத்தி, ஆயுளை அதிகரிக்கத் தக்கவை. இந்த ஊரின் ஆறு ஸானடோரியங்கள் இயங்குகின்றன. நூற்றுக்கணக்கான க்ஷயரோகிகள் சுகம் பெறுகின்றனர்.

இந்தப் பிரதேசத்தின் மருந்தியல்பை அறிந்து பல ஆங்கிலேயர்கள் தங்கள் இல்லங்களை இங்கு அமைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய குழந்தைகள் படிக்க வசதியாகப் பல கான்வெண்ட், பப்ளிக் ஸ்கூல்கள் ஆகியவையும் இங்கே இருக்கின்றன. ஸனுவரிலுள்ள 'லாரன்ஸ் பள்ளி' நெடுங்காலப் புகழுடையது. தற்போதும் அயல் நாட்டுப் பிரயாணிகளுக்கேற்ற வசதிகள் நிறைந்த அலாசியா ஹோட்டல் இங்குள்ளது.

பாஞ்சாலச் சமவெளிக்கு மிக அருகில் உள்ள உயரமான இடம் (6,822 அடி) இதுவே. வழியிலுள்ள இயற்கைக் காட்சிகளைக் காண்பதற்கென்றே பலர் குறுக்குப் பாதை வழியாகக் கால்காவிலிருந்து நடந்து வருவதுண்டு. மேற்கே ஓடும் ஸட்லஜ் நதியின் பிரதி பலனம் மாலைச் செவ்வொளி படர்ந்த வானத்தில் நிழற்படம் போலச் ஜொலிக்கும். இதற்கு உவமையாகக் கூறக்கூடிய காட்சிகள் உலகத்திலேயே மிகச் சிலவாகும்.

இந்தப் பிரதேசத்தில் மிகுதியாக உள்ள பைன் மரங்கள் நோயைக் குணப்படுத்தும் தன்மையுள்ளவை. அந்த மரங்களிலிருந்து எடுக்கப்படும் பிசின் காகிதத் தொழிலுக்கு ஏற்ற துணைப் பொருள்.

ஊசி மருந்துகள் தயாரிப்பதற்கு ஏற்ற தட்ப வெப்பத்தை இயற்கையிலேயே படைத்த காரணத்தினால் இங்கு பாஸ்டர் இன்ஸ்டிட்யூட் 1900-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது. நாய்க்கடி ஊசிமருந்தை மட்டுமே இங்கு முதலில் தயாரித்தார்கள். இந்தியாவில் யாருக்கு இந்த ஔஷதம் தேவைப் பட்டாலும் இங்குள்ள மருத்துவ மனைக்குத்தான் தந்தி கொடுத்தார்கள். பிற்காலத்தில் பலவகை ஸீரமும், வாக்ஸைன்களும் இங்கேயே தயாரிக்கத் தொடங்கினர். மத்திய அரசாங்கத்தின் நேர் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம் இது ஒன்றுதான். இவர்கள் தயாரிக்கும் ஊசி மருந்துகள் பெரும்பாலும் இராணுவத்திற்கும், மீதி மாநில அரசாங்கங்களுக்கும் பயன்படுகின்றன.

விஸ்தாரமான உயர்ந்த கட்டிடத்தில் இந்த ஸெண்ட்ரல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் செயல் புரிகிறது. ஐந்நூறுக்கும் மேற்பட்ட நிபுணர்

களும், தொழிலாளர்களும் இங்கு பணி புரிகிருர்கள். முயல்களுக்கு நாய்க் கடி விஷத்தை ஏற்றி, அங்கு பெருகிய அணுக்களை ஆட்டின் கழுத்தில் செலுத்தி, அதன் மூளையை எடுத்து அரைத்துப் பாடம் செய்து கண்ணுடிக் குப்பிகளில் அடைக்கிருர்கள். பார்ஸிகளின் சவக்கிணற்றைப் போன்ற தளத்தில் ஆடுகள் உருட்டப்படுகின்றன. தலையில்லாத அந்த ஆடுகளை உண்ண ஆயிரக் கணக்கான கழுகுகள் அங்கே வருகின்றன. அவை உண்ட மீதி தீக்கு இரையாகிறது.

இதே போல் பாம்புக் கடி, டெடனஸ், காலரா, டைஃபாயிடு அனைத்திற்கும் மருந்துகளை தயாரித்து வெளி இடங்களுக்கு அனுப்புகிருர்கள். இந்த ஆலைக்கு நேர் எதிர் வீட்டில் காஷ்மீரின் முன்ளுள் பிரதமர் பண்டிட் ராமச்சந்திரகாக் வசிக்கிருர். மஹாராஜா ஹரிசிங்கிற்கு இவர் நேர் வழி காட்டியிருந்தால் இந்தியா எத்தனையோ தொல்லைகளிலிருந்து விடுபட்டிருக்கும்.

உல்லாசப் பயணத்திற்கு மிகச் சிறந்த இடம் கஸௌலி. 'மங்கி பாய்ண்ட்' என்ற இடத்திலிருந்து காணும்போது வெளிர் நீலவானம் தெரிகிறது. அதிலிருந்து பீறிட்டு வரும் கதிரொளி, பசுமரங்கள் மலைச் சரிவுகள், நீரோடைகள், சிறு சிறு வீடுகள், அவற்றின்மேல் ஊரும் மஞ்சள் நிறப் பறங்கிப் பழங்கள், விதவிதமான பறவைகள் அனைத்தும் சேர்ந்து ஓர் ஓவியக் காட்சியாகவே விளங்குகிறது.

படையினருக்கான விடுமுறை வீடு ஒன்றும் இங்குள்ளது. கோடை காலத்தில் இங்கு இடம் கிடைப்பது கடினம். குளிர் நாட்களில் இங்கே பெய்யும் முதல் மழையில் ரோஜா இதழ்களைப் போலப் பனித்தகடுகள் விழும். பிறகு, சற்றுச் சீற்றம்கொண்டு கண்ணுடி மணிகளைக் கொட்டும். அடுத்து வீதி யெல்லாம் பஞ்சுமயம். பனி மணலில் கால்கள் புதைய நடப்பதும், உருவங்கள் சமைத்து விளையாடுவதும், அதில் சறுக்குவதும் இனிமையான அனுபவங்கள் '0' டிகிரிக்கும் குறைந்த தட்பநிலை இங்கு வெகு சகஜம்.

தரம்பூருக்குத் திரும்பி வந்து சற்று முன்னே சென்று, மற்ருெரு சமாந்திரப் பாதை வழியாக வடமேற்கே சென்ருேமானல் 'ஸுபாத்து' என்ற பழைய நகரத்தை அடைகிருேம். இந்தப் பிரதேசம் முன்பு நேபாள மக்களின் ஆட்சிக்குள்ளாகியிருந்தது. இங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் 'கொட்டார்' என்ற சிறிய சமஸ்தானம் இருந்திருக்கிறது. ஸுபாத் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்படும் முன்பு, இங்கே கடும் போர் நிகழ்ந்தது 16-ஆம் நூற்ருண்டின் இறுதியில் ஜெனரல் அமர்சிங் ராடோர் வெள்ளையர்களை எதிர்த்து நின்ற விவரத்தை இன்னும் இந்தப் பிரதேச வாசிகள் பெருமையுடன் பேசிக் கொள்கிருர்கள். அமர் சிங் இங்கே ஒரு கோட்டையையும் நிறுவியிருக்கிருர். அதன் சிதிலமான சுவர்கள் பழைய வீர வரலாற்றைக்

கூறுகின்றன. அடுத்து இங்கே ஒரு வைஸ்ராய் மாளிகை உள்ளது. ராஜப் பிரதிநிதி கோடை காலத்தில் இங்கும் சில நாட்கள் தங்குவது வழக்கம். சற்று தெற்கே செல்லும் பாதையின் இருமருங்கிலும் குன்னிஹாரா பழத்தோட்டங்கள் உள்ளன. ஆப்பிள், பப்பு கோஷா, நாஷ்பதி, மாதுளை ஆகியவை இங்கே அமோகமாக விளைகின்றன. நெல் வயல்களும் கோதுமைக் கழனிகளும் படிப்படியாக இறங்கிச் சமவெளி மட்டத்தைத் தொடுகின்றன.

ஸூபாத் கடைத் தெருவிலிருந்து வடக்கே நோக்கினால், அற்புதமான சித்திரக் காட்சி ஒன்று தென்படும். இங்கிருந்து சிம்லாவுக்கு விண் தொலைவு பதினைந்து மைல்தான் இருக்கும். ஐத்தோக், சிப்லா, சிறிய சிம்லா ஆகிய நகரங்களில் உள்ள மாளிகைகளில் கண்ணாடிச் சாளரங்கள் கதிரொளி பட்டு வைரக் கற்களைப் போல் பளபளக்கின்றன. அதன் பின்னணியில் வெண் தொப்பி அணிந்த மலைச் சிகரங்கள். அவற்றுக்குப் பின்னால் செவ்வானம்! தொடர்ந்து நீல விண் வெளி.

இந்த ஊர் நேபாள மக்களின் வாழ்க்கையுடன் தொடர்பு கொண்ட காரணத்தினால், கூர்க்கர்களின் படைப் பயிற்சி நிலையம் ஒன்றை இங்கே அமைத்திருக்கிறார்கள். இங்குள்ள படை அதிகாரிகளின் 'மெஸ்'ஸில் பெரிய நூல்நிலையம் ஒன்று உள்ளது. ஆயிரக்கணக்கான ஆங்கிலப் புத்தகங்கள் இங்கே உள்ளன. அவற்றில் பல அரிய விஷயங்களைப்பற்றிய நூல்கள். அமைதியாக உட்கார்ந்து சிந்திக்கவும் எழுதவும் படிக்கவும், மிகவும் ஏற்ற இடம் இது.

திரும்பி வந்து தரம்பூரிலிருந்து இரண்டு மைல் வடக்கே சென்றோமானால், புகழ் பெற்ற தக்ஷாய் படை வீட்டை அடைகிறோம். ஏறக்குறைய ஆறாயிரம் அடி உயரத்தில் உள்ளது இது. முற் காலத்தில் ராஜ வம்சத்தைச் சேர்ந்த கைதிகளைச் சிறை வைப்பதற்கான இடமாக இது இருந்ததால், (தாகா—ஷாஹி-அரச குடும்பத்துக் குற்றவாளி) இதற்குத் 'தக்ஷாய்' என்று பெயர் வந்தது.

இந்தியாவில் எந்த இடத்தில் எத்தகைய வீடுகள் அமைத்து இன்பம் அனுபவிக்க வேண்டும் என்று தேர்ந்தெடுப்பதில் வெள்ளையர்களுக்கு நிகரே கிடையாது. இந்த மலை முகட்டில் உறுதியும், அழகும், வசதியும் மிகுந்த கட்டிடங்களை அவர்கள் அமைத்திருக்கிறார்கள். இங்கிருந்து காணும்போது இந்தப் பிரதேசத்தின் அழகு திரைச் சீலையில் வரைந்தாற்போல் தோற்றமளிக்கிறது. மூச்சுத் திணற வைக்கும் எழில் என்று சொன்னால் கூடப் பொருத்தமாக இருக்கும். இந்தச் சௌந்தரியத்தைக் காணும் போதுதான் உலகத்தின் பிரசித்தி பெற்ற ஓவியர்கள் எல்லாம் எதற்காக டார்ஜிலிங், மஸ்ஸூரி, நைனிடால், மணாலி ஆகிய இடங்களைத் தங்கள் குடியிருப்பாகத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது

புலனாகிறது. விஸ்வகர்மா, இங்கு வேலைக்கு வேலை வண்ணக் கலவைகளை அள்ளிச் சிதறுகிறான்!

நடுவிலுள்ள குன்றைச் சுற்றிலும் 'ச்சாரிங் க்ராஸ்' என்ற 'காதலர் பாதை' வளைய வருகிறது. அந்தப் பாதையின் ஓரத்தில் உட்கார்ந்து மலை எழிலை அனுபவிப்பதற்கு ஏற்றதாகப் பல சிமிட்டிப் பெஞ்சுகளை இட்டிருக்கிறார்கள். பாதையின் தொடக்கத்தில், குன்றின் சரிவில் பல பித்தளைத் தகடுகள் மின்னுகின்றன. சூரிய ரஸ்மியில், அதிலிருந்து பிரதிபலிக்கும் வண்ணச் சிதறலின் எழிலுக்கு உவமையே கிடையாது. அதை நெருங்கிப் பார்த்தால் 1678-ம் ஆண்டிலிருந்து இங்குப் படையினர் தங்கியிருந்த விவரம் தெரியும்.

முதல் பட்டயம் 1678-ல் இருந்து 1777 வரை இங்கு முகாம் அமைந்திருந்த ராயல் ஸ்காட்ஸ் ரெஜிமெண்டினுடையது. அதிலே பிரிட்டிஷ் மன்னரின் மகுடம், ஆலிவ் கிளைகள், மலர் ஆகிய ரெஜிமேண்டின் அடையாளங்கள் உள்ளன. கடைசிப் பட்டயம் 13 வது டோக்ரா படையினருடையது அவர்களுடைய புலிச் சின்னம் பயங்கரமாக விழிக்கிறது. டோக்ரா படையினர் அண்மையில் நிகழ்ந்த மோதலில் புலியைப் போலவே சீறிப் பகைவர்களைச் சாடினர்.

இதற்கு நேர் எதிர்த்தாற்போல் விசாலமான புல் வெளியும், மலர்த் தோட்டமும் கொண்ட படை அதிகாரிகளின் 'மெஸ்' அமைந்துள்ளது. இதனுள் ஸ்ரீ ஸெய்ன் - இவர் ஹரியானாவைச் சேர்ந்தவர்- வரைந்த அற்புதமான வண்ணப் படங்கள் உள்ளன. இந்த ரெஜிமெண்ட் இமயத்தின் சரிவிலிருக்கும் டீட்ஸா நதிக் கரையில் தண்டிறங்கியிருந்ததால். அந்த நதியிலிருந்த வண்ணக் கற்களையே பொருத்தி, ஆற்றை வரைந்திருக்கிறார். ஓவியர். 'நதி எப்போது நம்மேல் நீரை வாரி இறைக்குமோ'' என்ற பிரமை அதைக் காணும் போதெல்லாம் நமக்கு உண்டாகிறது.

இமயகிரியின் சாரல்களில் சூரியனும் வெண் மேகமும் விளைவித்திருக்கும் ஒளி ஜாலங்களை எல்லாம் படமாக்க முயன்றிருக்கிறார் ஸ்ரீ ஸெய்ன். வெறும் வண்ணங்களினால் ஒளி பேதங்களை அவர் எப்படிக் காட்டினார் என்பது மிகப் பெரும் வியப்பு!

தக்ஷாய் குடியிருப்பு மிகப் பழமையானது. இங்கே ஒரு பப்ளிக் ஸ்கூல், ஸெண்ட்ரல் பள்ளி ஆக இரண்டும் இயங்குகின்றன. பொருள் வசதி உள்ளோரைத் தவிர, பொது மக்களின் குழந்தைகள் அனைவரும் படிக்க இயலாத இந்தப் பள்ளிகளைப் 'பப்ளிக் ஸ்கூல்' என்று அழைப்பது வியப்புக்குரியதே! ஸ்விஸ் நாட்டு ஒத்துழைப்புடன் கடிகார உறுப்புக்கள் தயாரிக்கும் சிறிய தொழிற்சாலை ஒன்றும் இங்கே உள்ளது.

தக்ஷாய் நகரத்தின் இன்னொரு சிறப்பு. இரவில் இங்கிருந்து பார்க்கும்போது தென்படும் ஒளி விளக்கின் காட்சியாகும். வானத்துத் தாரகைகளை உதிர்த்து வரிசைப்படுத்தி, ஏற்றி அணைப்பதுபோல் விளங்குகிறது சண்டிகட் நகரம். இதைக் காணும் போதெல்லாம் இன்னதென்று சொல்லத் தெரியாத ஒரு கிளுகிளுப்பும் போதையும் நமக்கு உண்டாகிறது. இதற்கு நிகரான காட்சி இந்தியாவில் வேறு எங்கேயாவது உண்டா என்பது சந்தேகமே.

இரவில்தான் இப்படி என்றால், வெய்யிலும் மழையும் கலந்த பகல் நேரத்தில் காணும் காட்சி இன்னொரு வகைச் சிறப்புடையது. கதிரொளி பட்டுச் சண்டிகட் ஏரி வெள்ளித் தகடாக மின்னும். பிஞ்ஜோருக்கு அருகிலுள்ள ஸுராஜ்பூர் ஆலையின் புகைக் கூண்டு வானத்தில் கோலமிடும். படிப்படியாக இறங்கும் வயல்கள் வானத்தைமுட்ட ஆசைப்படும் விருட்சங்கள், விதவிதமான வண்ணப் பறவைகள், ஜரிகை விளிம்புடன் கூடிய மேகத் திரள், அவ்வுள்ளிருந்து வடிகட்டி வரும் கதிரொளி ஆகிய இவை நம்மை எங்கோ இட்டுச் செல்லும்.

குளிர் நாட்களில் எதிரே வருவதுகூடக் கண்ணுக்குத் தெரியாது. பகல் வேளைகளில்கூட லாரிகள் மஞ்சள் விளக்குகளுடன் பவனி வரும், நம்மை மேகங்கள் சூழ்ந்துவிடும்போதும், மேகத் திரளிடையே நாம் உலாவும்போதும் நாம் கந்தர்வர்களாகவே மாறி விடுகிறோம்.

சிறிது நேர அளவிற்காவது நம்மை உயர் நிலைக்கு இட்டுச் செல்லுவதுதான் இந்த மலைப் பயணத்தின் நோக்கம்.

"தினமணி கதிர்"

குழந்தைகளுக்கு ஒரு கம்ப்பியூட்டர்

— பெ. நா. அப்புஸ்வாமி —

●

'குழந்தைகளே பிற்காலக் குடிகள்' என்னும் வாசகம், பல நாளும், பலரால் வழங்கப்படக் கேட்கிறோம். அரசியல்வாதிகள், கல்வி நிபுணர்கள், சமூகச் சீர்திருத்தக்காரர்கள் ஆகிய பல வகைப் பெரியோரும் இந்த வாசகத்தை வழங்கித்தங்கள் கொள்கைகளை வலியுறுத்த முயல்கிறார்கள்.

இந்த வாசகம் உண்மையானது. உண்மையின் அடிப்படையில் [illegible] து. குழந்தைகளைத் தக்கபடி பயில்வித்தால் அவர்கள் அதற்கு ஏற்ப முதிர்ச்சி பெற்று [illegible]ப்பெறுவார்கள். இந்தத் [illegible]த்தை நமது இந்திய நாட்டில் பயன்படுத்துவதைவிட மேலை நாடுகளிலும், கீழக்கோடு நாடாகிய ஜப்பானிலும் நன்றாகப் பயன்படுத்துகிறார்கள்.

குழந்தைகளோடு பழகியவர்கள், குழந்தைகள் செய்பவைகளைக் கருத்தோடு கவனித்து வருபவர்கள், பல விஷயங்களைக் காண்கிறார்கள். மோட்டார் கார் டிரைவர், மோட்டார் கார் வைத்திருக்கும்செல்வர் ஆகியோரின் வீட்டுக் குழந்தைகள் தாங்களே மோட்டார்கார்கள் ஆகிறார்கள், கியரை மாற்றுகிறார்கள். ஹாரனை அடிக்கிறார்கள். அவர்களுடைய கைகள் இரண்டும் திரும்பும் சக்கர வடிவமான பிடியை "ஸ்டீயரிங் வீல்' என்னும் மோட்டார் பகுதியைக் கற்பனையாகத் திருப்புகின்றன. அவர்கள் சாய்ந்து திரும்புகிறார்கள்; வேகமாக ஓடுகிறார்கள்; மெதுவாகச் செல்கிறார்கள். நாம் அவர்களைக் கூப்பிட்டால் பிரேக்கைப் போட்டுச் சட்டென்று நிற்கிறார்கள்.

புத்தகங்கள் நிறைய வைத்திருப்பவர்களின் வீட்டுக் குழந்தைகள் புத்தக விளையாட்டு விளையாடுகிறார்கள். மருத்துவரின் வீட்டுக் குழந்தைகள் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கிறார்கள். ஓவியரின் வீட்டுக் குழந்தைகள் சித்திரங்கள் வரைகிறார்கள். பூசாரியின் வீட்டுக் குழந்தைகள் மணி அடித்து கற்பூரம் காட்டி தெய்வத்தை வழிபடுகிறார்கள். இது தான் இயற்கை.

இதை உணர்ந்த அறிஞர்கள் தங்கள் நாட்டுக் குழந்தைகள் தங்கள் வீட்டுக் குழந்தைகள் எந்த விதமான வாழ்க்கையில் ஈடுபடவேண்டும் என்று நினைக்கிறார்களோ அதற்கு ஏற்றபடி விளையாட்டுச் சாமான்களை அக்குழந்தைகளுக்குப் படைத்துக் கொடு

த்து விளையாட விட்டுப் பயில் விக்கிறார்கள்

முன்நாளில் ஜெர்மனிநாடுபோரி லீடுபட்டு, உலகனைத்தையும் அடக்கி ஆள வேண்டும் என்று கருதிய காலத்தில், அங்கே குழந்தைகளுக்குப் படைத்துக் கொடுத்த விளையாட்டுச் சாமான்கள், பீரங்கிகள், நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்க் கப்பல்கள், ஏரோப்ளேன்கள், சிப்பாய்கள் போன்றவை இதை போலவேதான் ஒரு காலத்தில் ஆசியா முழுவதையும் தன் வசமாக்க வேண்டும் என்று விரும்பிய ஜப்பான் நாடும் இத்தகைய விளையாட்டுச்சாமான்களையே செய்து, தன் நாட்டுக் குழந்தைகளுக்கு அளித்து வந்தது. இவை எல்லாம் போர் வெறியில் அந்நாடுகள் ஈடுபட்டிருந்த காலத்தில் நிகழ்ந்தவை.

இப்போது போர் வெறி அறவே மறையாவிட்டாலும், ஒடுங்கி வருகிறது. போரினால் இனி விளையக்கூடியது பேராபத்து என்னும் அறிவே இவ்வாறு போர் ஓரளவு ஒடுங்குவதற்குக் காரணம். ஆதலால் அத்தகைய பொம்மைகள் விளையாட்டுச் சாமான்கள் முதலியவை அவ்வளவு செய்யப்படுவதும் இல்லை. குழந்தைகளுக்கு விளையாடக் கொடுக்கப்படுவதுமில்லை.

குழந்தைகளின் மனப்பான்மை ஓரளவு தானாகவே வெளிப்படுகிறது. ஓரளவு தூண்டப்பட்டு மலர்கிறது. டர்னர் என்னும் ஓவியர் தீட்டிய 'கார்த்தேஜ்' என்னும் ஓவியத்தில் முன்னணியில் சிறிய நீர்த்தேக்கம் ஒன்றும், அதில் விளையாட்டுப் படகைவிடும் குழந்தையும் காட்டப்படுகின்றன. பின்னணியில் 'கார்த்தேஜ்' நகர் மங்கிக் காண்கின்றது. இதை விளக்கிய ரஸ்கின், 'கார்த்தேஜ்' மக்கள் மாலுமிகள். சிறு பிராயம் முதல் அவர்கள் தங்கள் மனத்தைப் படகுகளுக்கும் கடலுக்கும் பறி கொடுத்து வந்தார்கள். இந்த அரிய உண்மைதான் அந்த ஓவியத்தின் உட்பொருள்'' என்று கூறுகிறார்.

அதைப்போலவே 'தீபம் ஏந்திய தேவதை, என்னும் புகழ் பெற்ற ஃபிலாரென்ஸ் நைட்டிங் கேல் (Florence Nightingale) தன் சிறு வயதில், கை கால் ஒடிந்த பொம்மைகளுக்குக் கட்டுப் போட்டுச் சிகிச்சை செய்து வந்தாள். வயது முதிர்ந்த பிற்காலத்தில் அவள் தலைசிறந்த மருத்துவ தாதியாக இருக்கப் போவதை அவ்விளையாட்டு முன்னரே சுட்டிக் காட்டிற்று.

இக்காலத்தில் மேலை நாடுகளில் அறிவே மிக மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. திருந்திய அறிவும், நுட்பமான தெளிந்த கல்வியும், அங்கே வற்புறுத்தப்படுகின்றன. நாடு முன்னேறவும் முன்னணியில் இருந்து வரவும் இவையே மிக மிக முக்கியமானவை என்று கருதப்படுகிறது.

அமெரிக்கா, இப்போது, விஞ்

ஞானத்தின் பல துறைகளிலும் முன்னணியில் இருப்பது போல் (ஆண்டு தோறும் அந் நாட்டிலே நோபில் பரிசுகளைப் பெறும் அறி வாளிகளின் தொகை இதற்குச் சான்று) முன்னாளில் ஜெர்மனி தலை சிறந்திருந்தது. இரு பெரும் போர்கள் காரணமாகவும், வேறு சில விளைவுகள் காரணமாகவும் அது இப்போது அந்நிலையை-அப் பதவியை இழந்து விட்டது. மீண் டும் அதைப் பெற முயன்று வரு கிறது.

அண்மையில் அந் நாட்டில், ஸ்ட்டர்ட்டுகார்ட்டு என்னும் நகரில் தொழில் நடத்திவரும் நிறுவனம் ஒன்று குழந்தை கள் வைத்து விளையாடக் கூடிய பொம்மைக் கம்ப்பியூட்டர் ஒன் றைப் படைத்திருக்கிறார்கள்; பன் னிரண்டு வயது நிரம்பிய குழந்தை களும், அவ்வயதுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமிகளும் அதை வைத் துக் கொண்டு பல விளையாட்டுக் களை விளையாடலாம். இப்போதும் சில சிறுவர் சிறுமிகள் தாயக்கட் டம் பல்லாங்குழி முதலியவைகளை விளையாடாமல் சொல் விளையாட்டு (Words play) போன்ற விளை யாட்டுகளை விளையாடுகிறார்கள் அல்லவா? அவை அறிவைத் தூண்டுவதைப்போலவே இவ் விளையாட்டும் அறிவைத் துண்டு கிறது.

அந்தக் கம்ப்பியூட்டர் கரு விக்கு 'லாஜிக்ஸ்' (Logikus) என்பது பெயர். அதன் விலை அவ்வளவு அதிகம் இல்லை-68 மார்க்குகள்தான் என்கிறார்கள். அதைப் பார்த்த நிபுணர்கள் அது அந்நாட்டில் மிக நன்றாக விலையா கும் என்று நினைக்கிறார்கள். வீட் டில் குழந்தைகளின் தந்தைகள் அதைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைவார்கள் என்றும் தாய் களுக்கு முதலிலேனும் அதைக் கண்டு கோபமே வரும் என்றும் சொல்லுகிறார்கள். ஏன் என்பது தெரிகிறது அல்லவா?

அது சிறிய டைப்ரைட்டர் (Typewritter) (தட்டச்சுக் கருவி) உள்ள அளவே இருக்கும். கூட்டல் போடும் இயந்திரங்கள் போல் தோன்றும். அதைப் பார்த் தாலே, அது காரியம் செய்யக் கூடிய கருவி என்பது தெரியும். அதில் பல கருவிகள் வைத்துள்ள முகப்புப் பலகை ஒன்று இருக்கும். அதில் ஸ்விச்சுகள் இருக்கும். டைப் ரைட்டரில் உள்ளது போல், இயந் திரங்களைத் தாங்கிய வண்ணம் இயங்கும் பகுதி ஒன்றும் (Carri- age) இருக்கும்

இது இயங்குவதற்கும், செயல் படுவதற்கும், தேவையான மின் ஆற்றலானது பாட்டெரி ஒன்றால் அளிக்கப்படும். மோட்டார் காரில் உள்ள பாட்டெரிகளுக்கு மின் ஆற்றல் ஊட்டப் படுவதைப் போல், அதற்கும் மின் ஆற்றலை அவ்வப்போது ஊட்டி வரமுடி யும். ஒவ்வோர் இயந்திரத் தோடும் அதை இயக்கி விளையாடுவது எப் படி என்று விளக்கும் துண்டுப் பத்திரிகை ஒன்று வைத்திருக்கும். நன்றாக அமைக்கப் பட்டதும்

முழு வடிவம் பெற்றதுமான கம்ப்யூட்டரை வேலை வாங்குவதைப் போல், அதையும் வேலை வாங்கலாம்.

ஆனால், முதலாவதாக கம்ப்யூட்டர்கள் எல்லாவற்றுக்கும் கற்றுக் கொடுப்பதைப்போலவே அதற்குக் கற்றுக் கொடுத்தாக வேண்டும். கிளிப்பிள்ளைகள் 'சொன்னதைச் சொல்லுமாம்' என்று செயல்படும். கம்ப்யூட்டர்கள் அவற்றுக்கு ஒருபடி மேலாக, கற்றுக் கொடுத்ததைப் பயன் படுத்தி, விடை சொல்ல வல்லவையாக இருக்கும்.

கற்றுக் கொடுத்த செய்திகளுக்கு ஏற்றபடி கால நிலையைப் பற்றிய ஜோதிடமோ, நோயைப் பற்றி இன்ன தென்று முடிவு செய்வதோ, கணக்குப் புதிர் ஒன்றுக்கு விடை கூறுவதோ, வேற்று மொழி ஒன்றிலிருந்து மொழி பெயர்ப்பதோ போன்ற பல வகையான செயல்களை அக் கருவி செய்யும். அக் கம்ப்யூட்டர்களோடு சிறுவர்கள் போட்டி போடலாம். சில வேளைகளில் அவை வெல்லும். சில வேளைகளில் அவை தோற்றுப் போவதும் உண்டு. அவை தோற்றுப் போனால் அவற்றில் உள்ள ஒரு சிறிய கண்ணாடி ஜன்னலில் 'உனக்கே வெற்றி, நான் உன்னைப் பாராட்டுகிறேன் என்று, பொருள் படும் செய்தி பளிச்சென்று தோன்றி இளம் மனத்தை மகிழ்விக்கும். இந் நாளில் முதிர்ச்சி பெற்று வரும் எலெக்ட்ரானியல் மூளை எவ்வாறு இயங்குகிறது என்பதை இவ் விளையாட்டின் மூலமாகச் சிறுவர் சிறுமியர் தெரிந்து கொள்வார்கள் என்று அவ்விளையாட்டுக் கருவியினைப் படைத்தவர் கூறுகிறார்கள்.

பழைய யுகங்கள் எத்தனையோ தோன்றி மறைந்து விட்டன. இப்போது எலெக்ட்ரானியல் யுகம் பிறந்துவிட்டது. அது விரைவாக வளர்ந்து வருகிறது. அந்த யுகத்தில் வாழப் போகும் மக்கள் இப்போது குழந்தைகளாக இருப்பவர்களே அல்லவா? அவர்களைப் பயில்விப்பது தம்முடைய கடமை என்பதை மேல் நாட்டார்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தகுந்த முறையில் நடக்கிறார்கள்.

நாமும் அதை அறிந்துகொள்ள வேண்டும். அறிந்து கொண்டு அதற்கு இணங்க நடக்க முயல வேண்டும்.

—"தினமணி சுடர்"

ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

— ஐ. வி. நாதன் —

ஜெர்மனியில் அல்ம் என்னும் இடத்தில் 1879-ஆம் ஆண்டில் ஆல்பர்ட் ஐன்ஸ்டின் பிறந்தார். சிறுவயதில் திக்கித் திக்கிப் பேசும் அவரை, உளறுவாயன் என்று பலரும் கேலி செய்தார்கள். ஆனால் அவர்தான் பிற்காலத்தில், ஆகாயத்திற்கும், காலத்திற்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தை எடுத்துரைத்த பேரறிவாளியாக மாறினார். சிறுவயதில் கணிதத்தில் மிகுந்த ஆர்வம். கணிதத்தின் உற்ற துணையான பௌதீகத்திலும் ஆர்வம்! பள்ளிப் படிப்பில் விருப்பின்றி இத்தாலியில் உள்ள மிலானுக்குச் சென்றார். ஒரு தெரிந்தவரது பரிந்துரையின் பேரில் 'உரிமை ஆய்வு இலாகா' என்னும் அலுவலகத்திலிருந்து பேட்டிக்கு அழைத்திருந்தார்கள். பேட்டியில் "இந்த அலுவலகம் பற்றி நீ என்ன அறிவாய்?" என்று கேட்டார்கள். "ஒன்றும் தெரியாது" என்று பதில் அளித்தார். ஆனால் அந்த வேலை அவருக்கே அளிக்கப்பட்டது. வேலையிலிருந்து கொண்டே ஓய்வு நேரங்களில் ஆல்பர்ட் ஆராய்ச்சி செய்து கொண்டேயிருப்பார்; இடைவிடாமல் பௌதிகநிகழ்ச்சிகளைப் பரிசோதித்து வந்தார். 1905-ல் பல ஆராய்ச்சியுரைகளை வெளியிட்டார். அவை பல அறிஞரின் மனதைக் கவர்ந்தன. 'ஸூரிச் சர்வகலாசாலை' அவருக்கு பி. எச். டி பட்டம் அளித்துக் கௌரவித்தது. அவர் புகழ் ஐரோப்பா முழுவதும் பரவியது. 1909-ல் அவர் படித்த 'ஸூரிச் தொழிற் கல்விக் கழகம்' பேராசிரியர் பதவியளித்தது. பிற நாடுகளில் அவருடைய புகழைக் கேட்டு விழித்துக் கொண்ட ஜெர்மனி, தன் மண்ணில் உதித்த ஆல்பர்ட் ஐன்ஸ்டினை பெர்லின் சர்வகலாசாலையில் பேராசிரியர் பதவி ஏற்குமாறு வற்புறுத்தியது, இரண்டு ஆண்டுகள் அங்கு பதவியிலிருந்தார் ஐன்ஸ்டின்.

கணித சாத்திரத்தில் தனித்துறையை ஏற்படுத்தியவர் ஐன்ஸ்டின். யாவரும் மூன்றுதான் உண்டு என்று கூறியபோது "இல்லை. நான்காவது ஒன்றும், (The Fourth Dimension) உண்டு என்று கூறியவர். 'கால ஆகாய சமுச்சய நியாயத்தை' எடுத்து முதன்முதலாக நிலைநிறுத்திப் பெருமை பெற்றவர் இவரே. 'வியாபகப் பொருள்' ஒளியானது ஒரு நொடிக்கு 186000 மைல் வேகத்தில் பரவ உதவுகிறது. வியாபகப் பொருள் இன்றி எதுவும் இல்லை என்று அறிஞர்கள் எண்ணிக் கொண்டிருந்தபோது "வியா

பகப் பொருள் என்ற ஒன்று இல்லவே இல்லை'' என்று அடித்துக் கூறினர். ''நிலைத்த ஒன்று வேண்டுமானல், காலத்தையும் இடத்தையும் இணையுங்கள். இல்லாத வியாபகப் பொருளைப் பற்றிக் கவி பாடாதீர்கள்'' என்ருர் அவர். 'பிரகிருதியும், பூதசக்தியும் ஒன்று' என்பதும், 'ஒளிக்கும் மின்சாரத்திற்கும் உள்ள தொடர்புகள் என்பதும் அவரால் எடுத்துரைக்கப்பட்ட முக்கிய உண்மைகள். பாரிஸ் பல்கலைக் கழகம் இவரை அழைத்து பி. எச்.டி. பட்டம் வழங்கிற்று. ஐன்ஸ்டினுக்கு 1921-ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. சுமார் 8000 பவுன் மதிப்புள்ள அப்பரிசுத் தொகை முழுவதையும் கல்வியின் வளர்ச்சிக்கு வழங்கி விட்டார் ஐன்ஸ்டின். பரந்த மனம், சாந்த குணம், எளிமை வாழ்வு—இவையெல்லாம் அவரிடம் மக்கள் கண்ட பண்புகள். இந்தியாவில் ஐன்ஸ்டின் பயணம் செய்தபோது அவர் ரிக்ஷாவில் ஏற மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கது!

பால் போர் பிரபு என்ற இங்கிலாந்தின் முதன் மந்திரி இவரை நியூட்டன், கலிலியோ முதலியோரைக் காட்டிலும் சிறந்த அறிஞர் என்று புகழ்ந்தபோது மிகவும் தன்னடக்கத்தோடு அவர் அவ்வுரையை மறுத்தார். அவருடைய அடக்க குணம் இதிலிருந்து நன்கு தெரிகின்றது.

இந்தியாவைப் பற்றி அவர் கூறியது: ''இந் நாட்டைப் பார்க்கும்போது மேனுடுகள் எக்கதிக்குள்ளானல்தான் என்ன?'' என்ற எண்ணம் தோன்றுகிறது. இந் நாட்டு மக்கள் கள்ளங்கபடம் அற்றவர்கள். மேல் நாடுகளில் காணப்படும் கல் நெஞ்சமும் சுய நலமும் இங்கில்லை. இதனுலேதான் இந்நாடு செல்வத்திலும் நாகரீக வாழ்விலும் பின்னடைந்திருக்கிறதோ என்னவோ, தெரியவில்லை!''

தெளிந்த அறிவும் அடக்கமான குணமும், அறிவியல் நுட்பமும் எளிமையான வாழ்க்கையும் மேற்கொண்டு பாரோர் போற்ற வாழ்ந்து பல நுட்பங்களைக் கண்டு பெரும்புகழ் பெற்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டின் தனது 76-ஆம் வயதில் காலமானர்.

—''காஞ்சி''

இனிய வாழ்வை அளிக்கும் வழிகள்

*

உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் விரும்புவது என்ன? மற்ற எல்லோரும் தன்னை விரும்ப வேண்டும் என்பதுதான். இதற்கு என்ன வழி? இதற்குள்ள ஒரே வழி—நாம் பிறரை விரும்புவது தான்.

ஒருவர் எத்தனை குறைபாடுடைய மனிதராக இருந்தாலும் முதலில் அவரை விரும்பவேண்டும்—நேசிக்க வேண்டும்—அவரிடமுள்ள திறமையை — காழ்ப்பு உணர்ச்சியின்றிப் பாராட்ட வேண்டும். இதற்கு செல்லாக்காசு கூடச் செலவில்லை. இருந்தும் எத்தனை பேர் எதிரியின் குணத்தையும் பாராட்டும் பண்பு பெற்றிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டும் மனப்பான்மை பலருக்கு அமையாததற்குக் காரணமென்ன?

அதற்கான காரணத்தை ஆராயும் முன்னர். ஒவ்வொருநாளும் எண்ணங்களைச் சலவை செய்து வைத்துக்கொள்ள வேண்டும்-அதாவது மனதில் வெறுப்பு, என்ற அழுக்குப் படியாமல் ஒவ்வொரு நாளும் தூய்மைப்படுத்தி வரவேண்டும்.

அதற்குச் சுலபமான வழி—நல்லதைக்காணும்போது மகிழ வேண்டும்—பாராட்ட வேண்டும்.

வீட்டிலேயே அடைந்து கிடப்பவர்கள்—ஒரு நாளைக்கு ஒரு முறையாகிலும் வாய்விட்டுச் சிரிக்காதவர்கள் — நல்ல நூல்களைக் கண்டால் தூக்கி யெறிந்து விட்டு 'உம்' மென்று உட்கார்ந்திருப்பவர்கள் — நூற்றுக் கணக்கானவர்கள் பணியாற்றும் அலுவலகங்களில்கூட யாருடனும் ஒட்டாமல் ஒதுங்கியே இருப்பவர்கள்—மனைவியிடம் கூட ரேஷன் முறை வைத்துப் பேசுகின்றவர்கள் ஆகியோரிடம் மகிழ்ச்சிகரமான வாழ்வு மருந்துக்குக்கூட இருக்காது.

நல்லதையே செய்பவர்தான் பிறரிடமும் நல்லதையே எதிர்பார்ப்பர். எனவே தன்னை முதலில் நல்வழிப்படுத்த ஒருவன் கற்றுக் கொள்ளவேண்டும்! தன்னை நல்வழிப்படுத்தக் கற்றுக்கொண்டவர்—தன்னைப் போலவே பிறரையும் நல்வழிப் படுத்த முயல்வார்கள். தீமையினின்றும் தன்னைக் காத்துக் கொள்ள முயல்வார்கள். பிறருக்கும் உதவுவார்கள். பிறருக்கு உதவ ஆரம்பிக்கின்ற போதே பிறரை விரும்ப ஆரம்பிக்கின்ற போதே நல்ல எண்ணங்களும் அருமையான சூழ்நிலையும் இனிமையான வாழ்க்கைக்கு இடம் தேடித் தருகின்றன.

ஒருவன் நன்நம்பிக்கையை தன் நம்பிக்கையாக்கிக் கொள்ள வேண்டும். அந்த நம்பிக்கை வளரவழி

வகுக்க வேண்டும். நம்முடைய குறியும் கொள்கையும் நல்லதை நோக்கியதாகவே இருக்க வேண்டும்.

இவைகளைக் கற்றுக் கொள்பவன் தன்னை அறியாமலே பிறரை விரும்புவான்—பிறரால் விரும்பப் படுவான். இந்த நிலைமை ஏற்படும் போது அதன் பலனாக ஒவ்வொரு நாளும் குழப்பமில்லாத சூழலும்-தெளிவான செயலும்—அமைதியான வாழ்க்கையும் அவனைச் சுற்றிக் குடி கொண்டிருப்பதை அவனால் உணரமுடியும்.

எல்லோரையும் ஒரு முகமாக எதிர்ப்பது என்ற கொள்கை இருக்கிறதே அது ஒன்றுதான் பிறரை நாம் விரும்புவதற்கும் நம்மைப் பிறர் விரும்புவதற்கும் பெருந்தடைக் கல்லாக நிற்கிறது—அந்தத் தடைக்கல் எந்த வடிவில் நம்மனதில் கிடந்து உருண்டு கொண்டிருக்கிறதென்றால் — அதில் ஒரு வகை புறம் பேசுதல். புறம் பேசுகின்ற ஒருவன் பிறரையும் விரும்பமாட்டான். பிறரும் அவனை விரும்பமாட்டார்.

புறம் பேசுதல் என்ற செல்லாக் காசு ஒருவனிடம் இருக்கும் வரை —அவனும் உலகத்தில் செல்லாக் காசுதான்.

நம்மைப்பார்க்கின்றவர்கள்நம்மிடம் முதன் முதலில் எதிர்பார்ப்பது காசல்ல–பணமல்ல– சிரிப்புத்தான். அதற்கும் நம்மிடம் பஞ்சமென்றால் அந்தப் பஞ்சப் பிரதேசத்தை நோக்கி நட்புக் கொள்ள யார் வருவர்.

யாருக்காவது சிரிக்கத் தெரியவில்லையா? அவர்களை நேரே ஒரு கண்ணாடி முன் நிறுத்துங்கள். அவர் சுடுமூஞ்சி முகத்தை அவரையே பார்க்கச் சொல்லுங்கள். பின்னர் கொஞ்சம் சிரிப்பு மூட்டுங்கள், வேடிக்கை காட்டுங்கள். இந்த முறையை ஒவ்வொரு நாளும் —ஒரு மணிநேரம் செய்து வந்தால் போதும். அவரே சிரிப்பால் ஏற்படும் மகிழ்ச்சியை, விளைவை, அழகை, பொலிவானதோற்றத்தை உணர்வார். பிறகு சிரிக்கக் கற்றுக் கொள்வார்.

உள்ளத்திலே புதிய தெம்பு. உணர்விலே புதிய உறுதி. இதையெல்லாம் உணர்ந்த பிறகும் ஒருவன் சிரித்த முகம் காட்டாமல் நெறித்த புருவமும் வெறுத்த பார்வையையும் காட்டி வாழ்கிறான் என்றால் அவன் கோடி கோடியாகப் பணத்தை பாங்கியில் போட்டுவிட்டு 'செக்' புத்தகமும் கையுமாக அலைந்தாலும் அவனைப் பைத்தியக்காரன் கூட விரும்பமாட்டான்.

மேலும் பணத்தை பாங்கியிலே சேமித்து வைப்பது போல் சிரிப்பையும் இதயமென்னும் பாங்கியில் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

நம் எதிரிலே வருகின்றவன் நம்மை அடிமைகொள்ள நமக்கு கொடுக்கும் முதல் அட்வான்ஸ்க்

ஒரு இளமுறுவல்தான். அந்த முன் பணத்தை வாங்க மறுப்பவர் எவருமே இல்லை! அப்படியாராவது இருப்பார்களானால் பாவம்! அவர்கள் உலகத்து இன்பங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக இழந்தவர்களுக்குச் சமம்! வள்ளுவப் பெருந்தகை கூட இதைத்தான் அழுத்தமாகச் சொன்னார்—'துன்பம் வருங்கால் நகுக' என்று. மேலைநாட்டு வரலாறுகளை எடுத்துக் கொண்டால் சிரிப்பின் வலிமையால் மன்னாதி மன்னர்கள் சாதித்துக்கொண்ட வெற்றிகள் ஏராளம் உண்டு—அதைப் போல சரிந்த சாம்ராஜ்யங்களும் உண்டு. சிரிப்பில் எத்தனையோ வகை இருந்தாலும் எல்லோரும் தங்களை அறியாமல் அதற்குப் பணிந்து விடுகிறார்கள். எனவே கிட்டாதபொருள்களையும் கிட்டச் செய்து விடலாம் முறுவலின் மூலம்! இதனை உணர்ந்தோர்—இந்த ஆயுதத்தை உபயோகிக்கத் தவறவே மாட்டார்.

எனவே—பிறர் விரும்ப வாழ வேண்டுமா? இதோ சில வழிகள்.

(1) நல்லதைக் கண்டு மகிழ்க! பாராட்டுக!

(2) ஒருவனை மதிப்பிடும்போது அவனது வெற்றிகளையும் வேறு நல்ல பண்புகளையும் மட்டுமே கணக்கிட்டு மனத்திற் கொள்க!

(3) சிரிக்கக் கற்றுக்கொள்க!

(4) மற்றவர்களுக்கு உதவி செய்தல் மிக முக்கியம்!

(5) பிறர் மனம்புண்படும் சொல் செயல் தவிர்ப்பது முக்கியம்.

இதனைக் கடைப் பிடிக்கும் ஒவ்வொருவரும் வெற்றிப் பாதையில் நடைபோடுவர் என்பதில் ஐயமில்லை.

—"முத்தாரம்"

சூயெஸ் கால்வாய்

மத்திய தரைக் கடலையும் செங் கடலையும் இணைக்கும் நவீன சாத னங்களில் சூயஸ் கால்வாயும் ஒன்று. கிறிஸ்தவ சகாப்தத்திற்கு 20 நூற்றாண்டுகளுக்கு முன்பே இதன் உபயோகத்தை நன்கு அறிந்திருந்தனர். பார்வோ வம் சத்தைச் சேர்ந்த கிஸோட்ரிஸ் மன்னன் முதல் முதலாக முயற்சி எடுத்துக் கொண்டதாகக் கூறப் படுகிறது. இதன் பிறகு 1000 வருடங்களுக்கு கப்பல் போக்கு வரத்திற்கு வசதி ஏற்பட்டது. இது *பார்வோன் கால்வாய்* என்று அழைக்கப்பட்டு வந்தது. கி. மு. 521-ல் பாரசீக சக்கரவர்த்தி டேரி யஸ், மீண்டும் பார்வோன் கால் வாயைப் புதுப்பித்து, கப்பல் போக்கு வரத்துக்குப் பயன்படுத் தினர். தமது சாதனை குறித்து கல்வெட்டும் செதுக்கி வைத்தார். பாரசீக சக்ரவர்த்தி சைரஸால் தோற்றுவிக்கப்பட்ட அகிமீனியன் சாம்ராஜ்ய மன்னர்களின் ஆட்சிக்கு எகிப்திய மக்கள் ஒரு நூற்றாண் டுக்கு மேல் உட்பட்டிருந்தனர். மன்னர் டேரியஸ் எகிப்திய மக் களின் நலன்களில் மிகுந்த அக் கறை கொண்டிருந்ததுடன் சூயஸ் கால்வாய் வெட்டுவதற்கும் முயற்சி எடுத்துக் கொண்டார். மன்னர் டேரியஸ் காலத்தில் சூயஸ் கால் வாய் வெட்டப்பட்டது ஒரு பெரிய சாதனையாகும். ஆனல் தற்போது பொதுவாக சூயஸ் கால்வாய் பெர்டினண்ட்-டி லெ ஸெப்ஸ் என்ற பிரெஞ்சுக் காரரால் தான் வெட்டப்பட்டது என்பது உலக மறிந்த விஷயம். ஆனல் முதன் முதலில் இக் கால்வாயை வெட்டுவதற்கு அடிகோலியவர் பெர்ஷிய சக்ரவர்த்தியான டேரி யஸ் தான். தற்கால சூயஸ் கால் வாய் கப்பல் போக்கு வரத்திற்கு 1869-ல் திறந்து வைக்கப்பட்டது. இக்கால்வாய் ஸையது துறை முகத்திலிருந்து ஆரம்பித்து சூயெஸ் துறைமுகத்தில் முடிவடைகிறது. ஆனல் சக்ரவர்த்தி டேரியஸ் காலத் தில் வெட்டப்பட்ட கால்வாய் (சூயெஸ்) மத்யதரைக் கடலி லிருந்து புபாஸ்டிஸ் வரைக்கும் நைல் நதியைப் பயன்படுத்தி, அங் கிருந்து சூயெஸிலுள்ள செங்கடல் வரைக்கும் கால்வாய் வெட்டப் பட்டது. டேரியஸ் காலத்தில் நைல் நதிமூலமாகவே கப்பல், போக்கு வரத்து புபாஸ்டிஸ் வரை நடைபெற்றதாம்.

ஞாபகார்த்த ஸ்தூபிகள் :

இதைத் தவிர சக்ரவர்த்தி டேரி யஸால் சூயெஸ் கால்வாய்ப் பகுதி யில் நிர்மாணிக்கப்பட்ட ஞாப கார்த்த ஸ்தூபிகள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரி 6 ஸ்தூபிகள் இதுவரைக்கும்

சூயெஸ் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. சூயெஸ் கால்வாயின் இரு கரைகளிலும் இம்மாதிரி டேரியஸால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதை இக்கண்டு பிடிப்புகள் போதிய சான்றுகளுடன் நன்கு நிரூபிக்கின்றன. இதிலிருந்து தெரிவது என்னவென்றால் சூயஸ் கால்வாய்க்கு வித்திட்டவர் பெர்சிய சக்கரவர்த்தி டேரியஸ் தான் என்று நன்கு நிருபணமாகின்றது மேலும் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஸ்தூபியின் கல்வெட்டுக்களில், "நான் டேரியஸ் சக்ரவர்த்தி. நான் ஒரு பார்ஸி. எகிப்து என் ஆட்சிக்கு உட்பட்டிருக்கிறது. நைல் நதியிலிருந்து ஒரு கால்வாயை வெட்டுவதற்கு நான்தான் உத்தரவிட்டேன். அதன்படி இக்கால்வாய் வெட்டப்பட்டது." என்ற வாசகங்கள் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுக்களின் கீழ் டேரியஸ் மன்னனின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

ஏழாவது நூற்றாண்டில் எகிப்தை அராபியர்கள் வென்ற பின் நைல்-செங்கடல் மார்க்கமாக 641-42-ல் காலிப் ஓமார் அனுமதியின் பேரில் எகிப்தின் கவர்னர் அம்ரு இக்கால்வாயை மீண்டும் போக்கு வரத்திற்குப்பயன்படஏற்பாடுசெய்தார். 8-வது நூற்றாண்டு வரையில் இக் கால்வாய் மிகவும் உபயோகமுள்ளதாய் அமைந்தது.

பிறகு 1869-ல் இக்கால்வாய் மீண்டும் புதிதாக வெட்டப்பட்டு சர்வதேச வாணிபத்திற்கு திறந்துவிடும் வரையில் கால்வாய் உபயோகிக்கப்படாமலே சுமார் 8 நூற்றாண்டு காலம் வரை இருந்தது.

தற்கால சூயஸ்கால்வாய்

இக்கால்வாய் வெட்டுவதற்கு 60 லட்சம் பவுன் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டது.

பிரான்ஸில் வெர்ஸெயில்ஸ் நகரைச் சேர்ந்த பெர்டினென்ட் டிலெஸெப்ஸ் என்ற பிரெஞ்சுக்காரர் ராஜதந்திர குடும்ப பரம்பரையில் வந்தவர். இவர் தகப்பனர் மாத்யூ டி லெஸெப்ஸ் எகிப்திய பிரெஞ்சு கான்சல் ஜெனரலாக இருந்தவர். எகிப்திய வைஸ்ராய் முகம்மது அலி இவருக்கு மிகவும் நெருங்கிய நண்பராவார். ஐரோப்பிய வட்டாரத்தில் நல்ல செல்வாக்கும், மதிப்பும் உள்ளவர் லெஸப்ஸ். அக்காலத்தில் வியாபாரத் துறையில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் பிரிட்டிஷ் காரர்களுக்கும் போட்டா போட்டி இருந்த காலம். ஆதிபத்திய பேராசையால் இரு நாடுகளும் சாம்ராஜ்ய விஸ்தரிப்பில் ஈடுபட்டிருந்த காலம். லெஸெப்ஸ் அரசியலில் எவ்விதமும் கலந்து கொள்ளாமல் சூயஸ் கால்வாய் வெட்டும் பிரச்னையில் இறங்கினர். 1858-ல் ஒரு சர்வதேச கம்பெனியைத் தோற்றுவித்தார். இதில் 4000 பங்குகள் வரை பிரெஞ்சு சர்க்காரும் எகிப்தும் பங்குகளை வாங்கின. பங்கு ஒன்றுக்கு விலை 500 பிராங்க். ஆனல் இந்தக் கால்வாய்த்திட்டம் நிறைவேற முடியாமல் அவ்வப்பொழுது பிரிட்டிஷ் சர்க்கார் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருந்தது. 1859-ல்

லெஸெப்ஸ் கால்வாய் வெட்டும் வேலையைத் தொடர்ந்தார். பாலை வனமாகத் தோற்றமளித்த மணற் பாங்கான வெளியிலும் எவ்வித குடி தண்ணீர் வசதி கூட இல்லாத இடத்திலும் கால்வாயை வெட்ட லாயினர். நைல் நதியிலிருந்து திம்ஸா ஏரிக்கு ஒரு கிளைக் கால் வாய் வெட்டி குடி தண்ணீர் வச தியை ஏற்படுத்தினர்கள். இதற்கு வேண்டிய இயந்திரங்கள் யாவும் பிரான்சிலிருந்து தருவிக்கப்பட் டன. திம்ஸா ஏரிக்கு பின்புறத் தில் கால்வாய் வெட்டும் வேலையும் சூயஸெஸன் வடக்கில் கால்வாய் வெட்டும் வேலையும் ஆரம்ப மாயிற்று. சூயஸ் கால்வாய் ஆரம் பக்கட்டத்தில் சுமார் 100 மைல் நீளமும் 150 முதல் 300 அடிவரை அகலமுள்ளதாக இருந்தது. அதன் ஆழம் 26 அடியாக இருந்தது. நடுவில் 4 ஏரிகள் இணைக்கப்பட் டன. கப்பல்கள் செல்வதற்கு 8 தங்கு துறைகளும் அமைக்கப்பட் டன. கால்வாய் அகலம் 80 அடி யாக இருந்தது.

திறப்பு விழா

இக்கால்வாய் திறப்பு விழா 1869—ஆம் வருஷம் நவம்பர் 17–ந் தேதி நடைபெற்றது. பல நாடு களின் கப்பல்களும் யுத்தக் கப்பல் களும், நீராவிக்கப்பல்களும், படகு களும் நின்றன. ஒவ்வொரு கப் பலிலும் அதனதன் தேசக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. அந்த வைபவத்தில் பிரெஞ்சு ராணி, எகிப்திய வைஸ்ராய் இஸ்மாயில் பாஷா கலந்து கொண்டனர். இவ் விழா நடப்பதைக்காண லெஸெ ப்ஸ் மகிழ்ச்சியடைந்தார். சூயஸ் கால்வாய் திட்டம் இவ்வாறு வெற் றிகரமாகக் கட்டி முடிக்கப்பட்ட தும் அது பூகோள ரீதியாகவும், அரசியல் துறையிலும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துவிட்டது. இரண்டு கடல்கள் இணைக்கப்பட்டன. தனித்தனியாக இருந்த உபகண் டங்கள் ஒன்று சேர்க்கப்பட்டன.

1956-ல் நாஸர் சூயஸ் கால் வாயை தேசிய உடைமையாக்கி னர். எகிப்தின் ஆதிபத்திய உரி மையை பிரிட்டனும் பிரான்சும் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் உண் டாகிவிட்டது. தற்சமயம் இஸ் ரேல் — எகிப்து சண்டையினால் சூயஸ் கால்வாய் போக்கு வரத் துக்குத் தடை ஏற்பட்டிருக்கிறது.

—“தினமணி சுடர்”

சத்தியமும், சத்யாக்கிரஹமும்

— [ஜே. பி. கிருபளானி] —

❋

உலகிற்குக் கொடுப்பதற்காகத் தம்மிடம் புதிதாய் எதுவும் இல்லையென்று காந்திஜி அடிக்கடி கூறி வந்தார். தனி பிரிவு அமைக்கும் நோக்கம் அவருக்கு இருக்கவில்லை. சீடர்கள் இருப்பதாகவும் அவர் உரிமை கொண்டாடவில்லை. சத்தியமும், அஹிம்சையும் பண்டைக் காலத்தில் இருந்தே இருந்து வருபவை என்று அவர் கூறினர். அப்படியென்ருல் உலக சிந்தனைக்காகவும், உலகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காகவும், குறிப்பாக அரசியல் சர்வதேசத் துறைகளில், அவர் சிறப்பாக என்ன செய்தார்? இந்தக் கேள்வியின் பல அம்சங்களை விவாதிக்கலாம். இதுவரை புறக்கணிக்கப்பட்டு வந்ததாக நான் கருதும் ஒரு அம்சத்தை இங்கு விவாதிக்கலாம்.

சத்தியமும் அஹிம்சையும் பண்டைக் காலத்திலிருந்தே இருந்து வருபவை என்பது உண்மை தான். முனிவர்களும், சீர்திருத்த வாதிகளும் உண்மையாக நடந்து கொண்டார்கள். லட்சக்கணக்கான சாதாரண மக்கள் உண்மையாகவே நடந்துகொண்டார்களா? உண்மையில், உலகில் பெரும் அளவில் உண்மை இல்லாவிடில், பொய் வளர முடியாது. எல்லோரும் அசத்தியத்தையே பின் பற்றினுல், அதாவது ஒருவர்கூட உண்மையாக நடந்துகொள்ளவில்லையென்ருல் தகவல்தொடர்பு நின்றுவிடும். யார் பேச்சையும் யாரும் நம்ப மாட்டார்கள். நாம் விவகாரம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் தங்கள் பேச்சைக் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பதால் தான் தகவல் தொடர்புசாத்தியமாயிற்று. இவ்வாருகத்தான் நடக்கவும் செய்கிறது.

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், ஏமாற்றுவோர் இருக்கிருர்கள் என்பது தெரிந்த விஷயம். வர்த்தக உலகில் இது சற்று அதிகமாக இருக்கும். இருப்பினும், ஒரு வியாபாரியின் பேச்சை மற்ருெரு வியாபாரி ஒரு தஸ்தாவேஜைப் போன்று எடுத்துக் கொள்கிருர் என்பது உண்மையே. இப்படி இருக்காவிடில் எந்த விவகாரமும் நடக்காது. லட்சக்கணக்கான ரூபாய் பவுன்டுகள், டாலர்கள் மதிப்புள்ள வியாபார விவகாரங்கள் வாய்ச் சொல்லினுலேயே நடைபெறுகின்றன.

சர்வதேச ராஜதந்திரத்தைவிட வேறு எதிலும் அதிக அளவில் ஏமாற்று முறை இருக்க முடியாது. உடன்படிக்கைகள். தங்கள் மனதுக்கு உகந்ததாக இல்லாவிடில். இவற்றை நாடுகள் குப்பைக் காகிதமாகவே கருதுகின்றன என்று கூறப்படுகிறது. இருப்பினும், மீண்டும் மீண்டும் நாடுகளுக்

கிடையே நாள்தோறும் உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும் ஏற்படுகின்றன. ஒரு ஒப்பந்தம் முறிந்ததும், மற்ருென்று உருவாகிறது. இல்லாவிடில், நாடுகளுக்கிடையே தகவல் தொடர்பு இருக்காது.

அப்படியென்ருல் காந்திஜியின் சிறப்புச் சேவைதான் என்ன? சத்தியத்தை சத்தியாக்கிரஹமாக மாற்றினுர். அதுதான் அவரது சிறப்பு. அசத்தியத்தையும், அநீதியையும், கொடுங்கோல் ஆட்சியையும் எதிர்க்கும் ஆயுதமாக மாற்றினுர். எளிதில் பரவக்கூடிய, உயிர்த் துடிப்புள்ள கருவியாக மாற்றினுர். இன்னும், லட்சக்கணக்கானவர்கள் உண்மையுடன் நடந்துகொள்கிருர்கள். ஆனுல், அவர்களில் சத்தியத்தை நிலைநாட்டுவதற்காக, வாழ்க்கை வசதிகளையும், ஏன் உயிரையும் தியாகம் செய்ய முற்படுவோர் எத்தனை பேர் இருப்பார்கள்? உண்மையுடன் நடந்துகொண்டால், அவர்கள் சத்தியவாதிகள்தான். சத்தியாக்கிரஹிகள் என்று-சத்தியத்தை நிலைநாட்டுவதற்காக எதையும் தாங்கிக்கொள்ளக் கூடியவர்கள் என்று—கூறமுடியாது. அவர்கள் சத்தியத்தைப் பின்பற்றுவோர். அதன் வீரர்கள் அல்லர்; அவர்கள்! சத்தியத்திற்காகப் போராடுவதெல்லாம் அசத்தியம் வழியாகத்தான். இரண்டு அசத்தியங்கள் சேர்ந்துவிட்டால், சத்தியமாகிவிடுமா என்ன? காந்திஜியின் கருத்துப்படி ஒருவர் சத்தியத்தைப் பின்பற்ற வேண்டுமென்ருல், சத்தியத்திற்காகப் போராட வேண்டும். அசத்தியத்தை எதிர்த்துப் போராடுவதற்கு சத்தியத்தைத் தவிர வேறு ஆயுதம் இல்லை. இப்படிச் செய்வதன் மூலம் சத்தியத்துடன் சத்தியம் சேரும். அசத்தியத்திடம் அசத்தியம் சேராது.

காந்திஜியின் அஹிம்சை இத்தகையதுதான். உலகின் சாதாரண விவகாரங்களில் ஒரு சிலர் தான் வன்முறையைப் பின்பற்றுகிருர்கள். வாழ்க்கையில் மக்கள் அமைதியாகவே செல்கிருர்கள். அண்டை வீட்டுக்காரர்களுடன் அவர்கள் எப்போதாவதுதான் சண்டை போடுகிருர்கள். அப்படி சண்டை போடும்போதுகூட அது சொற்போராகத்தான் இருக்கும். அண்டை வீட்டுக்காரர்களுடன் அவர்கள் சண்டை போட்டுக்கொண்டே இருந்தால், பிறகு அண்டை வீட்டுக்காரர்களே இருக்க மாட்டார்கள். ஆனுல் இந்த லட்சக்கணக்கான மக்கள் காந்திஜியின் நெறியின்படி அஹிம்சையைப் பின்பற்றுபவர்களா? இல்லையென்றுதான் சொல்லவேண்டும். அப்படியென்ருல் அவர்

களது அஹிம்சையில் என்ன குறை? எதிர்ப்பு அம்சம் இல்லை என்றுதான் நினைக்கிறேன். காந்திஜி நடத்தியது அஹிம்சை இயக்கம் மட்டுமல்ல; அஹிம்சையின் அடிப்படையிலான எதிர்ப்பு முறைதான் அது. ஒருவிதத்தில் அது ஒத்துழையாமை இயக்கம். அஹிம்சையின் அடிப்படையிலுள்ள எதிர்ப்பினை அவர் ஏன் தேர்ந்தெடுத்தார்? ஏனென்றால், இன்றைய உலகில் ஒரு கொலை நடந்தால் பொது சம்மதத்துடன் மற்றொரு கொலை நடக்கிறது. அதாவது, இரண்டாவது கொலையை நடக்க விடுவோர் இதற்கு உடன்படுகிறார்கள். இரண்டாவது கொலைக்கு எதிராக பொதுக் கருத்து இருந்தால், அதைத் தவிர்க்க முடியும். அதாவது, வன்முறையினால் வன்முறையை அகற்ற முடியாது என்பது இதிலிருந்து தெரிகிறது. அன்றே யேசுநாதர் சொன்னார், "சைத்தானை, சைத்தான் துன்புறுத்த முடியாது" என்று.

வன்முறையை எப்படித்தான் சமாளிப்பது? அஹிம்சையை வைத்துக்கொண்டுதான் அதை எதிர்க்க வேண்டும். வன்முறையினால் அல்ல. நாள்தோறும் வன்முறை வன்முறையினால் எதிர்க்கப்படுகிறது. ஆனால், அஹிம்சையின் அடிப்படையிலோ எதிர்ப்பாளர்கள் பின்பற்ற வேண்டுமென காந்திஜி கூறிய அஹிம்சை அதுவல்ல.

காந்திஜியிடமிருந்து ஒளி பெற்றோம் என்று நினைத்துக் கொள்ளும் நாம் சத்தியவாதிகள்தான். சத்தியாக்கிரஹிகள் என்று கூறிக்கொள்ள முடியாது. காந்திய தத்துவத்தை ஓரளவுக்கு மட்டும் ஏற்றுக் கொண்டிருப்பதால் தான் சுதந்திரப் பேற்றுக்குப் பிறகும் இவ்வளவு திறமையற்றவர்களாகி விட்டோம். நாம் சத்தியாக்கிரஹிகள் அல்லர். காந்திய வழியை நமக்கு மீண்டும் எடுத்துக் காட்டியது அமெரிக்காவில் இருந்த நீக்ரோ தலைவர்தான். மார்ட்டின் லூதர் கிங் என்னும் அந்த சத்தியாக்கிரஹி தமது லட்சியங்களுக்காக உயிரைக் கொடுத்தார்.

—"தினமணி"

உலகத்துப் பழமொழிகள்

உழைப்பின் வேர்கள் கசப்பானவை—அதன் கனிகள் இனிப்பானவை.

—ஜெர்மனி

நொண்டியைவிட பொய்யன் வெகு சீக்கிரம் கீழேவிழுந்து விடுவான்.

—அமெரிக்கா

ஒருவனுடைய உள்ளத்தை அறிந்துகொள்ள அவனுடைய வார்த்தைகளைக் கவனி.

—சீனு

மனித வாழ்வு குழந்தை கையிலிருக்கும் முட்டை மாதிரி.

—ருமேனியா

பெரும்பாலும் மனிதர்களுக்கு வரும் துன்பங்களுக்கெல்லாம் காரணம் அவர்கள் நாக்குதான்.

—ஸ்பெயின்

கழுதைக் கூட்டத்திற்கு அருகில் நின்றுகொண்டு காதைப் பற்றிப் பேசாதே!

—ஸ்விட்ஸர்லாந்து

பல சமயங்களில் முப்பத்திரண்டு பற்களாலும் நாக்கை அடக்க முடிவதில்லை.

—ஹங்கேரி

பணம் போகும்போது அதற்கு நூறுகால்கள். வரும் போது இரண்டே இரண்டு கால்கள்.

—இந்தியா

பொய்யனுக்குக் கிடைக்கும் சரியான தண்டனை—அவன் உண்மை சொல்லும்போதுகூட அதை யாரும் நம்பாதிருத்தல்.

—ஹீப்ரு

சத்தியத்தை வளைக்கலாம்—முறிக்க முடியாது.

—இங்கிலாந்து

முகத்தில் புன்சிரிப்பில்லாதவன் கடை திறக்கக்கூடாது.

—ஸ்காட்லாந்து

மகாத்மாவும், மாதரும்

(பிரதாப் சி. தத்தா)

"இந்தியாவின் விடுதலை, இந்நாட்டு மாதரின் தியாகங்களையும், அவர்கள் பெறும் அறிவையும் பொறுத்துத்தான் இருக்கிறது.... இந்தியப் பெண்களில் பெரும்பாலானோர் ஒரு நாளைக்கு ஒரு அணுகூட சம்பாதிப்பதில்லை. அவர்களுக்காகத்தான் எனது சர்க்காவையும் பிச்சை எடுப்பதற்கான பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு நாடு பூராவும் சுற்றுப்பிரயாணம் செய்கிறேன்.

—மகாத்மா காந்தி.

❊

நாட்டு விடுதலைக்காக காந்திஜி மேற்கொண்ட போராட்டம் போலவே, சமூக சீர்திருத்தவாதி என்ற முறையில் காந்திஜியின் பங்கும் நினைவுகூரத்தக்கதாகும். பரம்பரை பழக்க வழக்கங்களைக் கொண்ட இந்திய சமூகத்தில் மூட நம்பிக்கையினாலும், பல விஷயங்களில் மக்கள் காட்டிய வெறியினாலும் பல சீர்கேடுகளும் இருந்தன. சமய வாதியாக இருந்துங்கூட காந்திஜி, மதம், இனம், ஆண், பெண் வித்தியாசம் ஆகியவற்றின் காரணமாக வேறுபாடுகளை உருவாக்கி வந்த பழக்க வழக்கங்களைப் பொறுத்துக் கொள்ளவில்லை. அவர் இந்த விஷயத்தில் மிகவும் முற்போக்குக் கொள்கை கொண்டவராக இருந்தார்.

தாழ்த்தப்பட்டவர்கள் குறிப்பாக பெண்கள் புதுவாழ்வு பெறுவிடில் நாடு உண்மையான முன்னேற்றம் அடையமுடியாது என தீர்க்கதரிசியும், ராஜ தந்திரியுமாக இருந்த காந்திஜி கருதினார். ஆதலால் அவர்களது முன்னேற்றத்திற்கு இருந்த தடைகளை அகற்ற அவர் முயன்றார். கை ராட்டை இயக்கம், மதுவிலக்குக் கொள்கை, கிராம முன்னேற்றம், ஹரிஜன நல அலுவல்கள், மாதர் நல அலுவல்கள் ஆகியவை, அரசியல் விடுதலைப் போராட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தன. அவர் தமது எல்லா இயக்கங்களிலும் பெண்களை, ஆண்களுக்கு சமமாகவே கருதினார். இதன் மூலம் அவர்களுக்கு மேலும் சிறந்ததொரு வருங்காலத்தை உறுதிப்படுத்தி

ஞர். சி. எஃப். ஆண்ட்ரூஸ் குறிப்பிட்டதைப் போல இந்தியாவில் மகாத்மா காந்தி பலவிஷயங்களிலும் கவனம் செலுத்தினர் என்ருலும், இந்திய மாதர்களுக்கான இயக்கத்துக்கு அவர் கொடுத்த முக்கியத்துவத்தைப் போல வேறு ஒரு சில இயக்கங்களுக்குந்தான் முக்கியத்துவம் அளித்திருக்கிருர். ஆண், பெண் சமத்துவத்தில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

பழங்கால சம்பிரதாய மரபு பின் பற்றும் ஒரு சமூகத்தில் பெண்கள் விடுதலே, ஒரு சாதாரண காரியமாக இருக்கவில்லே, பால்ய விவாகம், வரதட்சிணே முறை, விதவைகளுக்கு எதிரான சமூகக் கொடுமைகள், பொதுவாக சமூகத்தில் பெண்களுக்கு இருந்த தாழ்ந்த நிலே ஆகியவற்றுக்கு எதிராக அவர் பல முறை போராட்டத்தைத் துவக்கினர்.

பெண்கள், வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் பொம்மைகளாக இருக்கவேண்டும் என்று அவர் ஒருபோதும் விரும்பியதில்லே. இத்தகைய வீட்டு அடிமை ஏற்பாடு நமது காட்டு மிராண்டித் தனத்தைத்தான் குறிக்கிறது. " என்னேப் பொறுத்தவரையில் சமயலறை அடிமைத்தனம், காட்டு மிராண்டித் தனத்தின் ஒரு அம்சம் தான். இந்த நிலேயிலிருந்து நமது பெண்களே உடனடியாக விடுவிக்கவேண்டும். பெண்கள் வாழ்நாள் பூராவும் வீட்டு வேலேகளேயே செய்ய வேண்டும் என்பதில்லே. பெண்களின் உரிமைகளேப் பொறுத்தவரையில் நான் சற்றும் விட்டுக் கொடுக்க மாட்டேன். சட்டத்தின் கட்டாயத்தினல் அவர்களுக்கு இத்தகைய நிலேமை ஏற்படக்கூடாது" என்று காந்தி கூறினர்.

பழக்க வழக்கங்களோ, அல்லது வேரூன்றி விட்ட நம்பிக்கையோ அவரை ஊக்கம் இழக்கச் செய்யவில்லே. பெண்களுக்குத் தாழ்ந்த நிலேயைக் கொடுத்துள்ள எல்லா நம்பிக்கைகளேயும் அவர் கண்டித்தார். அவரது கொள்கைகள் நிலேயினல் சம்பிரதாய குடும்பங்களில் ஏற்படக்கூடிய கலவரத்தைப் பார்த்து அவர் அஞ்சவில்லே.

சமூகத் தீமைகளே எதிர்த்துப் போராடும்போது அவர் எப்போதும் அடிப்படை நிலேயிலிருந்துதான் செல்வது வழக்கம். அதே போல பால்ய விவாகத்தை அவர் கண்டனம் செய்தார். சின்னக் குழந்தைகள் விஷயத்தில் கன்னிகா தானம் என்ருல் என்ன? ஒரு தந்தைக்குக் குழந்தைகள் மீது உடைமை கொண்டாட முடியுமா? அவர் குழந்தைகளது உடையவரல்ல. சொந்தக்காரர் அல்ல, பாதுகாப்பாளர்தான். குழந்தைகளின் சுதந்திரத்தை விற்க முயன்ருல் அவர் குழந்தைகளேப் பாதுகாக்கும் உரிமைகளேக்கூட இழந்து விடுவார் என்று காந்திஜி கருதினர். சாரதா சட்டத்தை அவர் வரவேற்ருர். பெண்களுக்கான திருமண சம்மத வயதை உயர்த்த வேண்

டும் என்று திருமதி முத்துலட்சுமி ரெட்டி சென்னையில் இருந்த காங்கிரஸ் மந்திரி சபையைக் கேட்டுக் கொண்டபோது, திருமண சம்மத வயதை 14-லிருந்து 16 ஆக உயர்த்த வேண்டும் என்று காந்திஜி கருத்து தெரிவித்தார்.

விதவைத் திருமணம்

விதவைத் திருமணங்களை அவர் ஊக்குவித்தார். விதவைகளைத் தான் மணம் புரிந்து கொள்வது என்று இளைஞர்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் யோசனை கூறினார். இப்படிச் செய்வதன் மூலம்தான் இருளும், இன்னலும் நிறைந்த வாழ்விலிருந்து விதவைகளைக் காப்பாற்ற முடியும் என்று அவர் கருதினார். 1921-ல் விதவைகளின் எண்ணிக்கை முந்தைய 20 ஆண்டுகளில் மிகவும் உயர்ந்திருந்தது. இதைக் கண்டு காந்திஜி வருந்தினார். "மனைவியை இழந்த ஒருவருக்கு மறுமணம் புரிந்து கொள்ள எந்த அளவுக்கு உரிமை இருக்கிறதோ, அதே அளவுக்கு ஒரு விதவைக்கும் மறுமணம் செய்து கொள்ளும் உரிமை உண்டு. சமயத்தின் பேரில் பசுக்களின் பாதுகாப்புக்காகக் கூச்சலிடுகிறோம். ஆனால், ஒரு விதவையின் பாதுகாப்பை மறுக்கிறோம். இளம் பெண்கள் மீது விதவைத் தனத்தைச் சுமத்துவது மாபெரும் குற்றமாகும். கணவரின் அன்பை உணர்ந்த ஒரு பெண் கணவர் இறந்தபின் விதவைக் கோலம் பூண்டால், வாழ்க்கைச் சிறப்புப் பெறுகிறது. வீடு புனிதமாகிறது. சமயத் தன்மையும் உயர்கிறது. ஆனால், சமயமோ, பழக்கவழக்கங்களோ விதவைத் தனத்தை கட்டாயமாகச் சுமத்தினாலும் அது தாங்க முடியாத கொடுமையாக இருக்கும். ரகசியமாகச் செய்யப்படும் தீய செயல்களினால், வீடு சிறப்பை இழக்கக் கூடும். சமயத்தின் சிறப்பும் குறையக்கூடும்" என்று காந்திஜி கூறினார்.

"அடிப்படை விருப்பத்தை நிறைவேற்ற எண்ணிய போதிலும் கட்டாயத்தின் காரணமாக நிறைவேற்ற முடியாத நிலைமையில் இருக்கும் ஒரு விதவை இருக்கும் வரை நம்மையே ஆளத்தகுதி பெற்றவர்கள் என்றோ, பிறரை ஆளும் தகுதி உடையவர்கள் என்றோ, 40 கோடி மக்கள் கொண்ட நாட்டின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் தகுதி பெற்றவர்கள் என்றோ நம்மை நாமே கருதிக்கொள்ள முடியுமா? இது சமயமல்ல, சமயமின்மையேயாகும்" என்று காந்திஜி கூறினார்.

பெண்கள் உடன்கட்டை ஏறும் சம்பிரதாயத்தை அவர் எதிர்த்தார். கணவர் மறைந்தால் தன்னைத் தானே தீக்கிரையாக்கிக் கொள்ளும் முறை அறிவின் அடையாளமல்ல. அறியாமையின் சின்னமேயாகும் என்றும், ஆத்மா என்றால் என்ன என்று தெரியாததே இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதே போல வரதட்சிணை முறையையும் அவர் திட்டவட்டமாக எதிர்த்தார். "இந்தப் பழக்கத்தை அகற்ற வேண்டும். திருமணம் என்பது பண ஏற்பாடாக இருக்கக் கூடாது. இந்த முறை ஜாதி வேறுபாட்டுடன் இணைந்திருக்கிறது. இந்தத் தீமையை அகற்ற வேண்டுமானால் மணமகளும் மணமகனும் அவர்களது பெற்றோரும் ஜாதி வேற்றுமைகளைத் தகர்த்தெறிய வேண்டும்" என்று காந்திஜி வற்புறுத்தினர்.

"நாட்டு இளைஞர்களின் மனப்போக்கில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும் அளவுக்கு இயல்பினை மாற்ற வேண்டும். திருமணம் செய்து கொள்வதற்குப் பணம் கேட்கும் இளைஞர்களைத் திருமணம் செய்து கொள்ள மாட்டோம் என்று பெண்கள் கூறும் அளவுக்கு அவர்களுக்குப் பெற்றோர்கள் கல்வியறிவு புகட்ட வேண்டும். மிக மோசமான நிபந்தனைகளுக்கு உட்படுவதை விட திருமணம் ஆகாமல் இருப்பதே மேல் என்று அவர்கள் கருத வேண்டும். திருமணத்தில் கௌரவமான இரண்டு நிபந்தனைகள் அன்பும், பரஸ்பர சம்மதமும் தான்" என்றும் காந்திஜி குறிப்பிட்டார். வரதட்சணை, தடுப்புச் சட்டம், ஹிந்து விதிமுறைச் சட்டமும் உட்பட எல்லா நடவடிக்கைகளும், இத்துறையில் மகாத்மா காந்தி மேற்கொண்ட இயக்கத்தின் பலனே ஆகும்.

வாழ்க்கையில் தவறிய பெண்களையும் அவர் மறந்துவிடவில்லை. இந்தப் பிரச்னை எவ்வளவு பிரமாண்டமானது என்பதை அவர் உணர்ந்திருந்தார். காகிநாடாவில் தேவதாசிகள் அவரை சந்தித்து, தங்களது இன்னல்களை எடுத்துக் கூறிய போது அவர் மிகவும் வேதனையடைந்தார். பரிலால் என்ற இடத்திலும் இது போன்ற சிலர் அவரை சந்தித்தார்கள் அவர்களது இன்னல்களை அறிந்த காந்திஜி, அவர்கள் பரிலால் ஆண்களின் அவமானச் சின்னம்தான் என்று குறிப்பிட்டார். ஒவ்வொரு நகரிலும் இதுதான் நிலைமை என்பது காந்திஜியின் கருத்து.

தேவதாஸி முறையை அவர் வன்மையாக எதிர்த்தார். இளம் பெண்களைத் தகாத முறையில் கட்டாயமாக ஈடுபடுத்தும் பழக்கத்தை காந்திஜி எதிர்த்தார்.

பெண்கள் விடுதலை

பெண்கள் விடுதலைக்காக அவர் நடத்திய போராட்டத்தில், பர்தா முறையை ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். பீஹாரில் மாதரும் சில தலைவர்களும் பர்தாவை ஒழிப்பதற்காகக் கிளர்ச்சி துவங்கியபோது அதை காந்திஜி ஆமோதித்தார். பர்தாவுக்கெதிராக, போராட்டம் நடத்தும் பீஹார் தலைவர்களை நான் பாராட்டுகிறேன். உரிய விதத்தில் இந்த இயக்கத்தை நடத்தினால் பீஹார் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நல்ல கல்வி அறிவு புகட்டுவதற்குச் சமமாகும்" என்றார் காந்திஜி. தர்பங்காவில் ஒரு கூட்டத்தில்

பெண்களை மட்டும் ஒரு திரைக்குப் பின்னால் உட்கார வைத்திருந்ததை அவர் பார்த்தார். இந்த முறையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுக் கூட்டத்தின் போது பெண்களை மட்டும் திரைக்குப் பின்னால் உட்கார வைத்தது தமக்கு வேதனை அளித்ததாக அவர் குறிப்பிட்டார்

"நான் பின்பற்றும் சமயம், சிறைச்சாலை சமயமல்ல. ஆண்டவன் படைப்பில் மிகச் சிறியவற்றுக்குக் கூட ஆதியில் இடம் உண்டு" என்றார் அவர். பெண்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்க காந்திஜியின் நீண்ட, உறுதி மிக்க போராட்டம் பெரிதும் உதவி புரிந்தது. திரைக்குப் பின்னால் இருந்த அவர்களை குளிர்காற்றும், ஏராளமான வாய்ப்புகளும்நிறைந்த புதிய உலகுக்கு அவர் அழைத்து வந்தார். சமூக மேம்பாட்டு போராட்டத்திலும் விடுதலைப் போராட்டத்திலும் ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக அவர்களைக் கருதினார். உப்பு சத்தியாக்கிரகத்தின்போது ஆண்களுடன் பெண்களும் வீறுநடை போட்டுச் சென்றார்கள். மதுபானக்கடைகளும், வெளிநாட்டுத் துணிமணிகள். விற்கும் கடைகள் ஆகியவற்றில் அவர்களும் மறியல் செய்தார்கள். மாபெரும் பொறுப்புகளை ஏற்பதற்காக அவர், அவர்களைத் தயார் செய்தார், கைராட்டையில். பெண்கள் ஆண்களையும் மிஞ்சினார்கள். அதே சமயம் ஆண்களைப்போலவே பெண்களும் வாழ்க்கையில் பல இன்னல்களையும் சகித்துக் கொள்ளப்பழகவேண்டுமென்றும் சுதந்திரப் பேற்றுக்குப் பிறகு பல சிரமங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும் என்றும் கூறினார்.

இந்திய அரசியல் சாஸனத்தின் அடிப்படை நெறியான சமவாய்ப்புக்கள் இந்திய மாதருக்கு ஒரு உரிமையாகத் தானாகவே கிடைத்தன. தேசத்தந்தை இந்தத் திசையில் இயக்கங்களை நடத்தாமல் இருந்திருந்தால் இந்த மாபெரும் சாதனை நிகழ்ந்திருக்க முடியாது.

அண்ணல் காந்தியுடன் பல ஆண்டுகள் சேவை புரிந்த ராஜ்குமாரி அம்ருத் கௌர் அவரிடம் பெண்களுக்குள்ள நன்றிக்கடனை இப்படிக் குறிப்பிடுகிறார். அஹிம்சைப் படையில் அவர் பெண்களைச் சேர்த்துக் கொண்டார். பெண்களிடம்அவர் அசையாத நம்பிக்கை வைத்திருந்தார். குழந்தை பெறுவதும், யஜமான சேவைசெய்வதும் மட்டுமே பெண்களின் கடமை என்று இருந்த ஒரு நாட்டில்இந்த அதிசயம் நிகழ்ந்தது. நமக்காக அவர் செய்துள்ள அஹிம்சைப் போராட்டத்திற்கு நாம் மிகவும் கடன்பட்டிருக்கிறோம்.

—"தினமணி"

காந்தியடிகள் உயர்ந்த மனிதர்தானா?

குருமணி —

※

உலகிலே பல அறிவுச்சுடர்கள், அரசியல் தியாகிகள், அறம் காக்கும் செம்மல்கள் தோன்றியிருக்கிறார்கள். நம்மிடையேயும் இன்று வாழ்கிறார்கள். அறிவுச் சுடர்களுக்கு உதாரணங்களாக தாகூர், ஸர். ஸி. வி. ராமன். எடிஸன், அரசியல் தியாகிகளுக்கு எடுத்துக்காட்டாக படேல், நேரு, லிங்கன், அறம் காக்கும் செம்மல்களாக பரமஹம்ஸர், வள்ளலார், ஏசு போன்றவர்களைக் கூறுகிறோம்.

ஆனால், தன் அறிவை அரசியலுக்காக அர்ப்பணித்து, தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் நாட்டின், நாட்டு மக்களின் நல்லனுக்காகவே தியாகம் செய்து, அதில் அறம் வளர்த்த செம்மல் நமது காந்தியடிகள். உதாரணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட உத்தம புருஷர் அவர்.

பாரத மண்ணில் எளிய குடும்பத்தில் 1869-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் தோன்றிய கரம்சந்த் மோகன்தாஸ் காந்தி, இந்தியாவில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு, இங்கிலாந்திற்குச் சட்டப் படிப்பிற்குச் சென்றார். அங்கு ஓர் சங்கத்தினை ஏற்படுத்தி. அதன் மூலம் இங்கிலாந்து அரசிற்கு, அது செய்யும் நற்செய்கைகளில் தன்னாலான உதவிகளைச் செய்தார். அப்பொழுது ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்டு வந்தாலும், அங்கு அவர் அந்த அரசிற்குச் செய்த பேருதவிகள் அவருடைய பெருந் தன்மையைப் பறை சாற்றுகின்றன.

ஒதுக்கப்பட்டவர்கள் அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற ஒரு இனம் ஏற்பட இடம் கொடுக்கக்கூடாது. ஹரிஜனங்களை யாவரும் சமமாக நேசிக்கவேண்டும் என்று அவர் தன் நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார். எல்லா மதத்தினரையும் சமமாகப் பாவித்தார். அவருடைய பிரார்த்தனை கூட்டங்களில் எல்லா மத மக்களும் பங்கு பெற்றனர். அவர் மிகுந்த விருப்பத்துடன் இராமாயணம், கீதை, பைபிள், குரான் போன்றவற்றைப் படித்தார். இக்காரணங்களினால் சமூக சீர்திருத்தவாதி காந்தியை காந்தி மகானாகக் காண்கிறோம்.

அவர் கடைப்பிடித்த சீரிய மதக் கருத்துக்களைப் பாராட்டுகிறோம்.

எளிய தோற்றத்துடன் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு,

1908-ல் தென்னுப்பிரிக்காவில் இந்தியர்களின் உரிமைக்காக 'நிற வேற்றுமைக் கொள்கையை' சாத்வீகமாக எதிர்த்துப் போராடி வெற்றி கண்டார். அது அவருடைய அரசியல் நேர்மையையும், செய்யும் செயலின் வன்மையையும் இயம்புகின்றன..

இந்தியா திரும்பிய காந்தியடிகள் 1916ல் காங்கிரஸில் சேர்ந்தார். அதிலிருந்து இந்திய தேசிய இயக்கம் அவர்தம் தலைமையில் புத்துணர்ச்சி பெற்றது.

1919 ஆம் ஆண்டிலிருந்து, 1947 ஆம் ஆண்டு வரை நடந்த இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரலாறு காந்தியடிகளின் வரலாறு. பிரிட்டிஷ் அரசுடன் போராட அவர் பின்பற்றிய முறை. சத்தியாக்கிரஹம், அரசாங்கத்தினிடம் கோபம் கொள்ளாமல். அதன் முறை கேடான சட்டங்களை மீறி நடத்தலும், அதனுல் ஏற்படும் தண்டனைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுதலும் இம்முறையின் அடிப்படை இயல்புகளாம். 'சத்தியம்' 'அஹிம்சை' இவை இரண்டும் அவரது போர்க் கருவிகள். சத்தியாக்கிரஹம் என்பது அறப்போர் மட்டுமன்று, மக்களது இயக்கமே அதுதான்.

தன் அதிகாரத்தை நிலைநாட்டுவதிலேயே குறிக்கோளாக இருந்த ஆங்கில அரசு காந்தியடிகளின் இயக்கத்தை சட்டைசெய்யவில்லை. காந்தியடிகளார் சொல்லொணு இன்னல்களுக்கு இலக்கானுர். அவருக்கு விலங்கிட்டனர். தடியடி கொடுத்தனர். உடலெங்கும் குருதி. சிறையிலே தள்ளினர், அங்கேயும் பல கொடுமைகள். இயக்கத்தைக் கைவிடுமாறு பணிவாகக் கேட்டுக் கொண்டனர் அரசினர். அவரைச் சுட்டுக் கொல்வதாகக் கூட அச்சுறுத்தினர். ஆனுல் இதனையெல்லாம் கண்டு அஞ்சிடவில்லை, அந்த அஞ்சா நெஞ்சினர். அவர் சொன்னுர், 'நீ என்னைக் கொன்றுவிடலாம்' ஆனுல் என் கொள்கையை உன்னுல் கொல்ல முடியாது' இதனைக்கேட்டு வல்லமை படைத்த அரசினரே நடுங்கினர். நாட்டு மக்களின் நலனே தன்னுடைய மூச்சு என்றவரல்லவா அந்த மகான்!

காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்படுத்தி அதில் நாட்டு மக்கள் அனைவரையும் சேர வத்புறுத்தினுர். ஆங்கில அரசினிடம் "பூரண சுதந்திர" கோரிக்கையை வெளியிட்டார். அதன் விளைவு அவர் இருமுறை சிறையிலடைக்கப்பட்டார்.

முடிவில் தங்களால் இனி இங்கு நிலைத்திருக்க முடியாது எனக் கண்டு கொண்ட ஆங்கிலேயர் தங்கள் நாட்டிற்குத் திரும்பினர். இந்தியா சுதந்திரம் அடைந்தது. அதற்குக் காரணமானவர் யார்? காந்தியடிகளும், அவரது தலைமையும் என்றுல் அது மிகையாகாது.

மகாத்மா காந்தி ஒரு சாதாரண அரசியல்வாதியாக-அரசியல் தலை

வராகத் திகழவில்லை. அவர் ஒரு ஆசிரியர், சமூக சீர்திருத்தவாதி, தொண்டர். தேசபக்தர். இத்துணை அம்சங்களும் சிறப்பாக ஒருவரிடத்தில் அமைந்திருத்தல் அரிதுதான்.

எவ்வாறு நல்ல பழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும், எளிய வாழ்வு வாழ வேண்டும், ஆடம்பரங்களை ஒதுக்க வேண்டும் என்று அவர் மக்களிடையே வாழ்ந்து காட்டினார். அந்த காந்தியை அந்த ஆசிரியரை காந்தியடிகள் எனப் போற்றுகிறோம்.

சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் கூடாது. எல்லா வகுப்பினரும், இனத்தினரும் ஒரு தாய் மக்கள். தீண்டாமையை ஒழிக்கவேண்டும். எல்லோரிடத்தும் அன்பும், பரிவும் காட்டி, எந்த வேலையும் இழிவெனக் கருதாமல் தன்னலமின்றி பிறர்க்கெனவாழ்ந்த பாட்டாளியின் நண்பன்-தொண்டன் காந்தியை "காந்தி மகாத்மா" என அழைக்கிறோம்.

இன்னல்களை, இடையூறுகளைப் புன்சிரிப்புடன் பொறுத்துக் கொண்டு, 'கர்மமே கண்ணாக' இருந்தார். தன்னுடைய சாத்வீக போராட்டத்தினால் இந்திய மக்களுக்குச் சுதந்திரம் தேடித் தந்த பெரும் தேசியத் தலைவர்தேசபக்தர் காந்தியை "இந்நாட்டின் தந்தை" எனக் கொண்டாடுகிறோம்.

இந்தியா மட்டுமின்றி உலகின்கண் பல்வேறு நாடுகளும் இன்று காந்தியடிகளின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றன.

நம் நாடு மட்டும் அவரைப் போற்றவில்லை. உலகமே அவரிடம் உரிமை கொண்டாடுகிறது. தத்துவங்களைப் போற்றுகிறது. வணங்குகிறது.

அந்தப் பெருமை யாருக்கு? அவர் அவதரித்த உலகிற்கே!

—"தினமணி"

காந்திஜியின் நெறிகள்

(ஸ்ரீ எஸ். கோவிந்த் எழுதிய கட்டுரையின் சுருக்கம்)

காந்திஜி பிடிவாதக் கொள்கை எதையும் விட்டுச் செய்யவில்லை. அவர் கூறியவற்றிலும், அவரது வாழ்க்கையிலும் ஒரே சீரான சித்தாந்த முறை ஒன்றைப் பார்க்கலாம். அவரது பொருளாதாரக் கொள்கையையும், செயல் திட்டத்தையும் ' இன்றைய நபர்கள் ' ஏற்றுக்கொள்ளாது இருக்கலாம் ; அவரது முற்போக்கான சமூக நெறிகளை சிலர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், அவரது தத்துவத்தைத் தனித்தனியாகப் பிரித்து ஆராய்வது தவறானதாகும்.

காந்திஜியின் அறிவுரைகள் அனைத்துலகுக்கும் பொருந்தக் கூடியவை. அடிப்படை நெறிகளை அறிவுறுத்திக் கூறிய அவர் மனிதனின் மனச் சாட்சியிடம் பேசினார். சொந்த நாடு, இனம் ஆகியவற்றைப் பார்க்காமல், உலக மக்கள் அனைவரும் அவரைப் புரிந்து கொண்டனர் ; பாராட்டினர்.

நல்ல அறிவுடைய தேசியவாதத்தின் அடிப்படையில்தான், சர்வதேசவாதம் அமைய முடியும் என்று காந்திஜி உணர்ந்திருந்தார். தேசிய வாதம் தீயது அல்ல ; குறுகிய மனப்பான்மையும், சுயநலமும், தனித்து வாழ வேண்டும் என்ற விருப்பமும்தான் தீய அம்சங்கள் என்று காந்திஜி கூறினார். இந்திய சுதந்திரத்தின் மூலம் மனித சகோதர உணர்வை ஏற்படுத்த எண்ணினார் காந்திஜி. அவர் எந்த இனத்தவரையும் வெறுக்கவில்லை ; தாய்நாட்டுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யவும் அவர் ஆயத்தமாக இருந்தார். ஆனால், மற்றவர்களை அழித்து, தாய் நாட்டைச் சிறப்பிக்க அவர் விரும்பவில்லை. மற்றவர்களுக்கும் தொண்டு செய்து அவர் தாய் நாட்டைச் சிறப்பிக்க விரும்பினார். இந்தியா மீது அவர் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார் இந்திய ஒற்றுமையை எப்படியாவது பாதுகாக்க வேண்டும் என்று விரும்பினார். குறுகிய பிராந்திய வாதம் அபாயகரமானது என்று எச்சரித்தார். ஒவ்வொரு பிராந்தியமும் சுயாட்சி உரிமையுள்ள தனிப் பகுதியாக எண்ணிக் கொண்டால் இந்தியாவின் சுதந்திரம், பொருள் இழந்துவிடும் என்றும், மற்றப் பகுதிகளின் சுதந்திரமும் அழியக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார், " வெளி உலகம் நம்மை குஜராத்திகள் என்றோ, மகாராஷ்டிரர்கள் என்றோ, தமிழர்கள் என்றோ குறிப்பிடுவதில்லை. இந்தியர்கள் என்று தான் அவர்களுக்குத் தெரியும் " என்றார் காந்திஜி.

லட்சக்கணக்கான இந்தியர்கள்

பாதி உடலைக் கூட மறைக்க முடியாமல், அரை வயிற்றுக்குக்கூட உணவு இல்லாமல், இன்னலுறுவதைப் பார்த்து வேதனை அடைந்தார். நகரங்களின் போக்கை கிராம வாசிகளும் பின் பற்றுவது அவருக்கு வேதனை அளித்தது. ஆதலால், கிராமங்களைத் தன்னிறைவுபெற்ற பகுதிகளாக ஆக்கும் பொருட்டு, கிராமத் தொழில்களுக்குப் புத்துயிர் ஊட்ட முற்பட்டார்.

இந்திய சமுதாயம், அதன் பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றின் அடையாளச் சின்னமாகவே கதர் அவருக்குக் காட்சி அளித்தது. அரசியல் ஒற்றுமையினை மட்டும் அவர் வற்புறுத்தவில்லை. மனித சமத்துவத்தையும் அவர் வற்புறுத்தினர்.

குடிசைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால், அவர் யந்திரங்களை எதிர்த்தார் என்று சிலர் தவருகக் கருதினர்கள். எல்லோருக்கும் உதவக்கூடிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களை நான் பாராட்டுவேன் என்று காந்திஜி கூறினர்.

அவரது அறிவுரைகளின் அடிப்படை நெறிகள் சத்தியமும், அஹிம்சையும்தான். சத்தியத்திலிருந்து அஹிம்சையைப் பிரிக்க முடியாது. வரலாற்றின் துவக்கத்திலிருந்தே மனிதன் அஹிம்சையினை நோக்கிச் செல்கிருன் என்று காந்திஜி கூறியிருக்கிருர். வேறு எந்தத் திசையிலாவது மனிதன் சென்றிருந்தால், மனித குலம் இதற்குள்ளாக அழிந்திருக்கும் என்பது அவரது கருத்தாகும். அஹிம்சையை நோக்கி முன்னேற வேண்டும்: அல்லது அழிவினை நோக்கிச் செல்ல வேண்டும். இவற்றைத் தவிர வேறு வழியில்லை.

அஹிம்சை முறையில் சமூகத்தினை நடத்த முடியாது என்ற கூற்றை காந்திஜி மறுத்தார்.

நிலையான சத்தியந்தான் கடவுள் என்று காந்திஜி கருதினர். கடவுளிடம் இருக்கும் நம்பிக்கையிலிருந்துதான் அஹிம்சையில் நம்பிக்கை ஏற்பட முடியும்.

உலகில் இப்போது நடக்கும் வன்முறைச் செயல்களையும், ஏற்பட்டிருக்கும் குழப்பத்தையும் பார்க்கும்போது, பொருள் வளம் மட்டும் இருந்தால் மனித குலத்தின் மகிழ்ச்சியைக் காண முடியும் என்ற கூற்று எவ்வளவு தவருனது என்பதைப் புரிந்து கொள்ளலாம். மனித குலம் விரும்பும் பலவற்றையும் வன்முறைச் செயல்கள் அழிக்கக் கூடும்.

காந்திஜி எளிமையாக வாழ்ந்தார். ஆனல் அவர் உயர்ந்த சிந்தனையாளர். மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகள் இல்லாத ஒரு சமூகத்தை அவர் விரும்பினர். ஆனல், அதற்காகத் துப்பாக்கி முனையில் மனித உள்ளத்திலிருந்து தீமையை அகற்றும் முறையை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

அஹிம்சையிலும், மனிதனின் நற்பண்புகளிலும் அவருக்கு அசை யாத நம்பிக்கை இருந்தது. வெற்றியை அடைய வன்முறை குறுக்கு வழிகள் இருப்பதாக அவர் எண்ண வில்லை. அஹிம்சை நிறைந்த சமூகத்தை அடைவதற்கான பாதை நீண்டதாகத் தோன்றலாம். ஆனால், அதுதான் மிகக் குறுகிய பாதை.

படை பல போட்டா போட்டி, ஆயுதக் குவிப்பு, நாடுகளின் விஸ்தரிப்பு, நோக்கங்கள் ஆகியவை மனிதனை செய்வதறியாது பிரமிக்கச் செய்கின்றன. இத்தருணத்தில்தான் காந்திஜியின் நெறிகள் நமக்குக் கை கொடுத்து உதவும். பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி கூறியிருப்பதைப் போல காந்திஜி அர்த்தமற்ற சுவையற்ற சிந்தனைக்குவியலாக இருக்கவில்லை; ஒரு மனிதன் எந்த அளவுக்கு உயர முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக அவர் வாழ்ந்தார்.

—தினமணி

புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி, B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

பாபுஜி தைத்த பாதரட்சைகள்

— [சர்வோதமன்] —

●

அண்ணல் காந்திஜி தேச விடுதலைக்கு சத்தியாக்கிரகப் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருந்த போது, அவரது அரசியல் வாழ்க்கைக்கு அப்பால், அவருள்ளே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த ஆன்மநெறித் தீயினால் புடம் போட்டெடுத்த அற்புதமான சம்பவங்கள் எத்தனை எத்தனையோ நிகழ்ந்துள்ளன.

அந்த எண்ணற்ற அவரது வாழ்க்கைச் சம்பவச் செல்வங்களே, மனித சமூகப் பிரச்னைகளுக்கும், மனிதான்மா உரிமைக்கு முழுமையானதொரு பாதுகாப்பைத் தேடித் தருபவைகளாக இருந்தன எனலாம்.

இரத்தவாடை அரசியல் புரட்சியிலே, அகிம்சை மணக்குமாறு யுகப் புரட்சியே செய்த அடிகளார் தான்—தனி மனிதனின் தூய்மை கள்தான் தேசத்தின் பொதுவாழ்க்கையின் விதியை உருவாக்குகிறது என்பதை வாழ்ந்து காட்டிய உலக உத்தமர்தான். அனைத்துலக மனித சமுதாயத்தின் பிரச்னைகளுக்கு அன்புவழி தீர்வுகாண எக்காலத்திலும் பயன்படத்தக்க காந்தியத்தை அளித்த அண்ணலார் தான்—சக்கிலியாகி செருப்புத் தைத்திருக்கிறார்—தோட்டியாகி மலத்தை அகற்றியிருக்கிறார்.

தெய்வீகத்தைத் தமது மனித வடிவிலே வெளிப்படுத்த வந்த தூயரான காந்திஜி, தீண்டாதவர்களுக்கென்று தள்ளி வைக்கப் பட்ட தொழில்களையும், தேசத் தொண்டுகளாகச் செய்தார். மாந்தருள்ளே மகாத்மாவாக இருந்த அவர், மனிதருள்ளே தாழ்த்தப் பட்டமக்களுள் தாமும்ஒருவராகிக் காட்டுவதன் மூலம் மனித சாதியில் சகோதர அறத்தை மலர்விப்பதாகவே மனமார எண்ணினார்.

தென்னாப்பிரிக்காவிலே காந்திஜி தமது தாய்நாட்டு மக்களுக்குத் துணை நின்று தொண்டு வாழ்க்கையைத் துவக்கி தீவிரமாகப் பணி புரிந்து கொண்டிருந்தார். அப்போது அங்கே இந்திய மக்களின் சுயமரியாதை—சுதந்திர உரிமைகளுக்காக அவர் பொறுப்பிலே சத்தியாக்கிரகம் நடந்தது. அந்தச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர்களின் குடும்பங்களைப் பாதுகாக்கும் கடமையையும் அடிகளாரே ஏற்றுக்கொண்டிருந்தார்.

அந்தக் குடும்பங்களை ஒரே இடத்தில் வைத்துப் பராமரிக்கவே 'டால்ஸ்டாய் பண்ணை' என்ற பெயரில் ஒரு குடியிருப்பை அமைத்தார் அண்ணல். அந்தக் குடியிருப்புக்கான ஆயிரத்து நூறு ஏக்கர் கொண்ட ஒரு பண்ணையை அன்

பளிப்பாகக் கொடுத்தவர், தென்னாபிரிக்காவிலே காந்திஜியோடு தோளோடு தோள் நின்று தொண்டாற்றிய ஜெர்மன் யூதரான ஹெர்மன் கல்லன்பாக் என்பவராகும்.

பண்ணையில் பல்வேறு கைத்தொழில்களைப் பெருக்கி, அங்கு வாழும் குடும்பங்களின் வாழ்க்கைக்கான பொருளாதார தேவைகளை அவரவர்களே தேடிக்கொள்ளுமாறு செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட தொழில்களில் செருப்புத் தைக்கும் தொழிலும் ஒன்றாகும்.

அந்தத் தொழிலை ஜெர்மன் கத்தோலிக்கத் துறவிகளின் மடம் ஒன்று கற்றுத் தந்துகொண்டிருந்தது. தென்னாபிரிக்காவில் அப்போது அத்தொழில் முறையை அந்த மடத்திற்குச் சென்று கல்லன்பாக் அவர்கள் முதன் முதலாகக் கற்றுக்கொண்டு வந்து, அதனை அடிகளாருக்குக் கற்றுத் தந்தார். அவர், அங்கிருந்த இளைஞர் பலருக்குச் செருப்புத் தைக்கும் தொழிற் கலையைக் கற்றுத்தந்தார்.

தென்னாபிரிக்காவிலே ஜெனரல் ஸ்மட்ஸ், ஆங்கில அரசின் ஆற்றல் வாய்ந்த நிர்வாகியாக இருந்த அரசியல் தந்திரியாவார். அங்கே அண்ணல் காந்திஜி தாய்நாட்டு மக்களின் சுதந்திரப் பாதுகாப்புக்காக நடத்திய சத்தியாக்கிரகத்தின் போது காந்தி-ஸ்மட்ஸ் ஒப்பந்தம் ஒன்று உருவானது. அந்த ஒப்பந்தத்திற்கு அறிகுறியாக, ஜெனரல் ஸ்மட்ஸ் காட்டிய அன்புக்குப் பதிலாக அடிகளார் தம் கையாலேயே தைத்த ஒரு ஜதை செருப்புகளை ஸ்மட்ஸுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்.

அண்ணல் செய்தளித்த அந்தச் செருப்புக்களை நன்கு பயன்படுத்தினார் ஜெனரல் ஸ்மட்ஸ். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவைகளைமகாத்மாவுக்கே திருப்பி அனுப்பி வைத்தார் அவர்.

ஜெனரல் ஸ்மட்ஸ் எழுதிய தமது கட்டுரை ஒன்றில், "காந்திஜி சிறையில் எனக்காக அதிகப் பயனுள்ளதான ஒரு ஜதை செருப்புக்களைத் தயாரித்து விடுதலையானதும் எனக்கு அன்பளிப்பாக அனுப்பினார். அப்படிப்பட்ட ஒரு பெரிய மகாபுருஷனின் செருப்புக்களில் அடிவைக்க நான் கொஞ்சமும் அருகதை இல்லாதவன் என்று உணர்ந்தபோதிலும், பல ஆண்டுகளாக அந்தச் செருப்புக்களை உபயோகித்து வருகிறேன்" என்று கூறியுள்ளார்.

1932-ம் ஆண்டு எரவாடா சிறையில் அப்போது அண்ணல் காந்திஜி இருந்தார். அந்தச் சமயம் ஒருநாள் சர்தார் பட்டேல் அவர்கள் காந்திஜியிடம் சிறையிலே இருக்கும் செருப்புத் தைப்பவர் தமது செருப்புக்களைச் சரியாகத் தைக்கவில்லை என்று குறை பட்டுக்கொண்டார். புனிதர் பாபுஜியோ புன்னகையோடு பட்டேலைப் பார்த்து, "கொஞ்சம் தோல் கிடைத்தால் தங்களுக்கு நானே

சரியாகச்செருப்பு தைத்துக்கொடுப்பேன்" என்றார்.

வல்லபாய் பட்டேலுக்குவியப்பு மட்டுமின்றிஅவர் உள்ளம்திடுக்கிட்டுப் போனார். உலக உத்தமர் காந்திஜி தமக்கு செருப்புத் தைப்பதா என்பதை நினைத்து உடல் குறுகிப் போனார்.

காந்திஜி மேலும் "நீண்ட காலத்திற்கு முன்நான் கற்றுக்கொண்ட கலை இன்னும் என்னிடம் இருக்கிறதா என்று பார்த்துவிடுவோம். நான் நன்றாக செருப்புத் தைப்பவன். என் கை திறமைக்கு அடையாளமாக ஒரு ஜதை செருப்பை சோதேப்பூரிலுள்ள காதிப் பிரதிஸ்தான காட்சிசாலையில் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறினார்.

அந்தக் காட்சி சாலையிலுள்ள அடிகளார் தைத்த செருப்புகளின் ஜதை ஒரு அற்புதமானதாகும்.

அப்போது இந்தியாவுக்கு ஸோராப்ஜி அபாஜனியா வந்தார். அவர் அண்ணல் காந்திஜி தென்னாப்பிரிக்காவில் ஆரம்பித்த சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்ட இளம் பார்ஸிக்காரர். இங்கிலாந்துக்குச் சென்று வக்கிலாகி தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பிதொழில் நடத்தியதோடு தொண்டும் செய்துகொண்டு வாழ்ந்தவர்.

அவர் இந்தியா வந்தபோது சத்தியானந்த போஸ் என்பவர் அவர் மீது அளவற்ற அன்பைப் பொழிந்தார், ஆகையால் அதற்குத் தமது கைமாறாக அடிகளாரிடம் சொல்லி அவர் தைத்த ஒரு ஜதை செருப்புகளை சத்தியானந்த போஸுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டார் ஸோராப்ஜி. அவ்வாறே காந்திஜியும் தாம் தைத்த ஒரு ஜோடி செருப்புகளை சத்தியானந்த போஸுக்கு அனுப்பி வைத்தார்.

சத்தியானந்த போஸோ சிறியர். அடக்கமும், பண்பும், அமைதிப் போக்கும் உள்ளவர். அடிகளார் தைத்து அனுப்பிய செருப்புகளை தம் பாதங்களுக்கு அணியக் கூடாது என்றும், அவைகளைத்தம் தலைக்கே அணிகளாகச் சூட்டிக் கொள்ளவேண்டும் என்றும் சொல்லி விட்டார். ஆகவே அந்தச் செருப்புகளை காட்சிசாலைக்கு அனுப்பி வைத்து விட்டார் அவர்.

1942—ஆம் ஆண்டு ஆகஸ்டுப் புரட்சியின் போது கைதாகி ஆகாகான் மாளிகையிலே அண்ணல் காந்திஜி சிறை வைக்கப்பட்டிருந்தார். அங்கிருந்து அவர் உடல் நலக் குறைவால் விடுதலையாகவிருந்த சமயம்.

அவரிடம் சொல்லாமல் அறுந்து போயிருந்த அவரது செருப்பு ஒன்றை செப்பம் செய்ய செருப்புத் தொழிலாளியிடம் கொடுத்து விட்டார் மநுபஹின் காந்தி. அதனை அறிந்த காந்திஜி, அறுந்த அந்தச் செருப்பைத் தைப்பதற்கு கூலியைக் கொடுக்க நம்மிடம் காசு ஏது? நாம் சம்பாதிக்கிறோமா? என்று கேட்டார் மனுபஹினிடம்.

மநுபஹின் காந்தியோ, மகாத்மாவுக்குப் பதில் சொல்ல முடியாமல், மீண்டும் செருப்பு தைப்பவனிடம் சென்று, மகாத்மாவின் மிதியடியைக் கேட்டார். அவனோ அடிகளுக்காக காசு வாங்காமல் தைத்துத்தருவதாகச் சொன்னான். அவனை அடிகளாரிடமே அழைத்து வந்து விட்டார் மநு.

செருப்புத் தொழிலாளியைப் பார்த்து சத்தியச் சித்தர் காந்திஜி "என்னை உன்னுடைய சீடனுக்கிக் கொண்டு கிழிந்த செருப்பை தைக்கும் கலையைக் கற்றுத் தருவாயா," என்று கேட்டார். அவன் அதற்கு இணங்கினான்.

அடிகளார் அவனைத் தமது இருக்கையிலே அமரச் செய்து அவனிடம் செருப்பை செப்பம் செய்யும் வேலையைச் செய்யத் தொடங்கினார். இடை இடையே தம்மைப் பார்க்க வந்திருந்த ஆங்கில நண்பர்களுடனும் அளவளாவினார்.

அழுக்காடையும், அலங்கோல தோற்றமும் கொண்ட ஏழை வறியவன் எதிரே, அனைத்துலக மானிடரெல்லாம் தொழுத கையோடு தரிசிக்க வல்ல ஆன்மஞானி!

செருப்பு சரி செய்யப்பட்டது. செருப்புத் தொழிலாளியின் சிந்தை சிலிர்த்தது. சத்தியச் செம்மலின் ஆன்மஞானச்சுடர், சற்றே ஒளிப் பெருக்கிக் காட்டியது.

மனிதராகப் பிறந்து—மகாத்மாவாக வாழ்ந்து—மனித குலத்தின் தெய்வமாக மாறியவர் காந்திஜி.

அவரது இந்தத் தெய்வ நிலைப் பேறுக்கு, அவர் தமது வாழ்விலே நிகழ்த்திக் காட்டிய எண்ணற்ற மனிதாபிமான செயல்களும், சாதனைகளுமே அடித்தளமான காரணங்களாகும்.

காந்திஜி, தொண்டர்—தலைவர் தேசத் தந்தை மட்டுமன்று, ஒரு தொழிலாளியும் கூட!

—"தினமணி"

தெரிந்து கொள்ளுங்கள்

[கி. மா. பக்தவத்சலம்]

※

முதல் முதலில் இங்கிலாந்து நாட்டில்தான் 1569-ம் ஆண்டில் விக்டோரியா காலத்தில் லாட்டரி பரிசு சீட்டு குலுக்கல் நடத்தப் பட்டது.

முதன் முதலில் நேரு சமாதானப் பரிசு உலக நாடுகள் (ஐ. நா.) சபை பொதுச் செயலாளர் ஊதாண்டுக்கு வழங்கப்பட்டது. 1965-ம் ஆண்டுக்கான இந்தப் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. பரிசு தொகை ரு. லட்சம்.

முதன் முதல் நாமமும் துளசி மாலையும் அணியும் வழக்கத்தை வைணவர்களிடையே புகுத்தியவர் இராமானுசர்.

முதன் முதலாக பகிரங்கமாக ரேடியோ ஒலிபரப்பு செய்யப் பட்டது 1906-ம் ஆண்டில்தான்.

1826-ம் ஆண்டில் அதாவது சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னர் சர்தாமஸ் மன்ரோ அவர்களின் ஆணையின்கீழ் தமிழ் நாட்டில் கல்வி அபிவிருத்திக்கான சர்வே ஒன்று முதன் முதலாக நடத்தப்பட்டது.

1855-ம் ஆண்டில்தான் தனிப்பட்ட நபர்கள் பள்ளிகள் வைத்து நடத்தினால் அவர்களுக்கு மான்ய உதவி அளிக்கப்படும் என்று முதன் முதலில் தமிழ் நாட்டில் அறிவிக்கப்பட்டது.

தென்கிழக்கு ஆசியாவிலேயே பெரிய தொலை நோக்கிக் கருவி ஆந்திராவில் ராவான் பூரில் உள்ள ஒரு சிறு குன்றின் உச்சியில் அமைக் கப்பட்டுள்ளது. 48 அங்குல அகலம் உள்ள லென்ஸ் பொருத்தப் பட்ட டெலஸ்கோப் இது.

உலகிலேயே மிகப் பெரிய தொலை நோக்கி (டெலஸ் கோப்) ஜப்பானில் இருக்கிறது. இதில் 84 அங்குலம் அகலம் லென்ஸ் இருக்கிறது.

அந்தமான் தீவு என்பது ஒரே தீவு இல்லை. அது 223 சிறிய தீவுகள் அடங்கியது.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.